பிஸ்மில்லாகி ஹறாமிதன் முஸல்லியன் முஸல்லிமா.

மனக்கலக்கத்தை தெளிவிப்பதாகிய

மங்காத்தீபமென்னும்

# மணிமுத்துமாலை.

இஃது.

தென்காசியிலிருக்கும் மெய்ஞ்ஞானகுருவாகிய

ஷைகுமுகம்மது அப்துல்காதர் ஸைனுத்தீன்

ஷாஹன்ஷா.

## ஆலீம் சாகிபவர்கள்

இயற்றியதை.

இப்பவும் அவர்கள் பார்வைபிற்று சீர் திருத்தலாய்

அவர்கள் முரீதீங்களின் முயற்சியால்

இயற்றப் பட்டு

தென்காசி,

கோமதி விலாசம் அச்சுயந்திர சாலையில்

அச்சிடப்பட்டது.

காப்பிரைட்

1914.

இதன் விலை (ஹிஜ்ரி 1333) அணா 8

THE REGISTRAR OF

பிஸ்மில்லாஹி

# அறிவிப்பு.

இதனால் சகல அன்பர்களுக்கும் தெரிவிப்பது யாதெனில் எங்கள் செய்கு முஹம்மது அப்துல்காதர்ஷா ஹன்ஷா ஆலிமவர்கள் மங்காதீபமென்னும் மணிமுத்து மாலையை வெளிப்படுத்தி சில காலத்தின்பின் (காரைக்காயல்) கனம் கா. சாஹிபு மரைக்காயரவர்கள் வேண்டுகோளால் காரைக்காயல் முஹம்மது சமதானி அச்சுக்கூடத்தில் ஹிஜ்ரி 1307-ல் அச்சிட்டதை ரிஜிஸ்டர் செய்யாததால் பலரும்மதை அச்சிட்டு சிலதில் எழுத்துப்பிழையுண்டாய் அதை சீர்திருத்தும்படி ஆக்கியோரிடம் வந்ததின்பேரில் அதை அவர்கள் கூடியவரை சீர்திருத்தியபின் இனியிதை பலரும் அச்சிடக்கூடாதென்று 1867-வது வருஷத்திய 25-வது ஆக்டின் 20-வது பிரிவின் 6-வது விதியின் பிரகாரம் யிந்நூலை காப்பிரைட் செய்யப் பட்டிருக்கிறது. ஆகையால் இந்நூலுக்குடைய வராகிய சேகுமுஹம்மது அப்துல் காதர் ஷா ஹன்ஷா ஆலீம் அல்லதவர்கள் அனுமதி பெற்றவர்களின் உத்திரவன்றி இதை அல்லது இதில்கண்ட பாகங்களைபிரித்தாவது பிறர் அச்சிடுதல்கூடா அப்படி அச்சிட்டால் அதனால் உண்டாகும் நஷ்டத்தை வசூலிக்கப்படும்.

இப்புஸ்தகம் தேள்வையானவர்கள் மேல்சொன்ன செய்கவர்களிடத்திலும் தென்காசி, அ. பள்ளிவாசல்த்தெரு சே. மீ. மு. அவர்களிடத்திலும் தென்காசி, வடக்கு கீளக்கோவிக்கால்த்தெரு ந. கொ. மு. அவர்களிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

பிசுமில்லா கிற்றகுமானிற்றகீம்

# மணிமுத்துமாலை

## விருத்தம்.

ஆதிஅந்தமுங்கடந்த அஹதைப்போற்றி
அகண்டபரிபூரணத்தினருளைப்போற்றி
சோதிகலிமாவதுவின் சுடரைப்போற்றி
சொரூபமாய்வந்த திருறசூலைப்போற்றி
நீதியுள்ளசரகதுவினெறியைப்போற்றி
நேசிக்கும்பிருபானினறிவைப்போற்றி
ஹாதிசெய்கபத்துல் காதிறுவலியைப்போற்றி
கற்பித்த பிதாகுருவைப்போற்றினேனே. (க)

குருவருளின் கிருபையினுலிந்நூல்யானுங்
கூர்ந்துசிலசூபியரின் மொழியைஆய்ந்து
அறிவுடையோரறிந்து அகமகிழ்ந்துவாழ்க
அறபதுவின் பாஷையதைத்தமிழி லாக்கி
ஒருவெழுத்தாய் நின்றிலங்குமொளிவுநாலே
உண்மையுள்ளமணிமுத்து மாலைசொல்லக்
கருவீட்டிற்கலிமாவாய் வழற்ந்துநிற்குங்
கத்தனேநித்தனேகாப்பதாமே. (உ)

## வேறு.

ஆசைபாசமுந்தவிர்ந்து அறிவுஞானக்கடலில் மூழ்கி
நேசபலனைச்செய்துவைத்த ரத்னமுகம்மதுகிருபையால்
வாசமாகவளர்ந்துநிற்கும் வள்ளல்கலிமாத்தனையறிந்து
ஓசைசெய்துஉணர்ந்துகொள்ள உண்மைநாயன்காப்பதாம். (ங)

## தோங்கல்.

அறிவின்கடலத்து அமுர்தமாக அலம்பிப்பொங்கியேவடியுவதில்
நெறியின்சூபியர்நெறிங்கியதில்நேசத்துடனவரள்ளியதை
பொரியினறிவதையொடிக்கியபின்புன்யப்பாண்டத்தில்விட்டு காச்சி
மருவிலாச்சரப்பலகையினுல்மனக்கையால்கடைந்தெடுத்தனனே. (ச)

எடுத்தவெண்ணையைநெய்யாகவே இழகயுருக்கியே இந்நூலதை
தொடுத்தேன்மணிமுத்துமாலையாக தொண்டன்முகம்மது அப்துல்காதர்
அடுத்தபேரிதையரிந்துகொண்டு அமலைநன்றாகச்செய்துவந்தோர்
படைத்தோன்சமுகத்தில்பதவிபெற்றுபக்காவின்பதிதனிற்சேருவரே (ரு)

சேரும்வகைதனைச்செப்புகிறேன் சிறந்தவொலிமாரும் ஆரீபீனும்
கூறிவந்ததைகுவலையத்தால் குறிப்பாமறிவதையெடுத்தபின்னர்
வேறுயெண்ணத்தைவிரட்டிவிடும் வேதக்கலிமாவின்வகைப்பொருளை
பாரிலுள்ளோர்களறியும்படி படைத்தோன்கிருபையால் பகரக்கேளே. (சு)

## (கலிமாவந்த இரகசியங்கூறல்.)

### விருத்தம்

லோகமேகலிமாவாயிருப்பதுவை
லோகர்களறியாமலலைவதனல்
பாகமாயறியும்படிசொல்லுவதை
பதமாகப்பாற்த்துணற்ந்துபதித்துக்கொண்டால்
யோகமாயொளிவதுவையுணற்ந்துகொண்டு
ஒன்றுபட்டிருப்பவர் தன்னிற்சேர்ந்து
ஏகமாய்அல்லாவின் கூட்டஞ்சேர்ந்து
இறையோனின்பதிதனிலேசேர்வீரன்றே. (எ)

உஜூதேகலிமாவாயுதித்தெழும்பி
உலகமெங்குமொன்றாகப்பறந்துநின்று
உஜூதேஉடல்தனிலே மூலமாகி
யொருமூன்றுநுக்த்தாவின்நடுவில்நின்று
உஜூதேயுதிப்பாக் குதித்தெழும்பி
உடலெங்குமொன்றுபோல்பறந்து நின்று
உஜூதேசுஜூதிடும் நெற்றிதன்னி
லோரெழுத்தாயொளிவாகயிலங்குந்தானே. (அ)

### தோங்கல்.

இலங்குந்தலமது காபக்கவுசாம்
யேகனல்லாவினரசுமாகும்
இலங்குமிருகண்ணிணடுவதிலே
யேகன்ஐனெனுங்கலிமாவாக

துலங்கிச்சுஜூதிட்டுவருபவர்கள்
துப்பமுகம்மது கோலந்தனில்
கலங்கலில்லாமற்சேற்ந்துவொன்றாய்
கருணையருள்பெற்றுயிருப்பார்களே. (௯)

அறுவென்னும்உஜூதானதுவே
அறிவுக்கடலாகப்பொங்கிநிற்க
இருளெனுமுதிப்பே மேகமா
யிறங்கிக்கிரிகித்துமேலேசென்று
திரளென்னுங்கூட்டங்கூடியபின்
தேட்டநாட்டமாயிடி முழங்கி
பொருளென்னுமழைபோல் பேய்ந்திடப்
புவியில்மனுவாகப்பிறந்தனரோ. (௰)

(கலிமாவின்இரகசியம்போதிந்து மனுவானது)

பிறந்தவகைதனைப் பேசுகிறேன் பிதாவினுசைதான்பொங்கிநின்று
உறைந்தமூளையின்றலத்திற்சென்று வெளிவாம் புத்தியோடான்க
கறந்தபாலதுபோலுருகி ஹக்கன்யாதுடன்கீழிறங்கி [லந்து
சிறந்தஅலிபானபிடறியூடே சிறிப்பாய்ந்ததேகருவூரினுள். (௰௧)

வேறு.

அலிபது நுகத்துமூன்று யச்சரஞ்சுளித்துவீச
பொலிவுள்ளகலிமாவாகிப் புவிதனில்மனுப்பேர்வாங்க
தொலியுடன்றசையும் ரத்தந்தெரிகையுள்ளநரம்புங்கூடி
வலுவுள்ளவெலும்பினூடே விணாவுடன்வரவுமாச்சே. (௰௨)

தோங்கல்.

வந்தவழியதினெடுக்கத்திலே வகுப்புவதிகமாயுண்டும்பாரு
அந்தஅலிபதுநுகததுமூன்றுயாதி மூலத்தில்தரித்ததுபார்
முந்தநுக்கத்தல்லாஉயிருமாகி முடிவினுக்த்துயிர்ஜிபிரீலுமாய்
சொந்தநடுவதில் ரூகுல்குதுசாய் சூழ்ந்தவுயிரதுபலதாகுமே. (௰௩)

ஆனஅலிபதன்கோலந்தன்னை யறியும்படியாகநாட்டங்கொண்டோர்
தானக்கவுசைனித்தலநடுவில் தரித்தஅலிபதைநோட்டமிட்டு
போனமூச்சதைப்போக்கிவிட்டுப்புகுதுமூச்சினுலேறிப்பார்க்க
மோனக்கலிமாவின்ரகசியத்தை மொழியக்கூடாமற்காட்டிடுமே ()

காட்டும்வகையதைக்கருதாமலும் கமலத்திறவுகோலறியாமலும்
பாட்டைபாடியேபசப்பிக்கொண்டுப்பழுதாம்பாதையைப்பற்றிநின்று
எட்டைக்கையிலேஏந்திபவன்ஞானியெனும்பெயர்கூறியேயாளும்
காட்டுமிருகம்போல்தான்கதறிகற்தன்மிலாகியின்சமுகம்விட்டான் ()

வேறு.

இலாகெனும்நாமம்பெற்று இறைவன்சமுகம்நின்று
உலாவெனும்நுகத்து முத்தேபுள்ளறைமூலம்வந்து
சலாகெனும்வட்டத்துள்ளே சகலமும்பொதிந்துநின்று
பலாகெனும்மாஹபாத்து பார்வைமுன்னொளிவாய்த்தோற்றும் (௧௬)

(உயிர்நதியின்தலம்) தோங்கல்.

மாவுல்ஹயாதென்னுமுயிர்நதிதான் மண்டைமூளையின்பக்கம்நின்று
நாவினுண்ணாவின்சிறுவாயலால்நளினத்துடன்வந்துருசிகந்திடும்
சாவுமுன்னமேசெத்தவனைச் சங்கைபெற்றிடச்செய்துவைக்கும்
யாவும்பொருந்தியவிழிநடுவில்விலங்கியொளிவாகத்துலங்கிடுமே. (௧௭)

துலங்குந்தலமதுதெரிந்திடாமல் தன்பாப்பதிதனிலுள்ளோர்சிலர்
எலங்குங்கானலை நீரென்றெண்ணி எட்டிப்போகியே தவிக்குமான்
போல், நலங்கொள்பாதைவிட்டுவிட்டுநஷ்டமடைந்தவர்நின்று
கொண்டு, சலங்கைகட்டியநாயதுபோல் சரகைவேறென்றுதிரிந்தா
ர்களே. (௧௮)

வேறு.

சரகெனும்நெறிவேறென்றுசருகியேதிரிகுவோரும்
சர்க்குருதன்னில்தானே சரத்துடனுணராதோரும்
பனைகின்றகலிமாத்தன்னின் பாங்கதையறியாதோரும்
பறந்துமேஇரைகிட்டாமல்பரத்வித்தலைகுவாரே. (௧௯)

உபயோகமில்லாவார்த்தை யுளறியேதிரிகுவோரே
சபைதனிநடுவிருக்கும் சர்க்குருவுணராதோரே
அபையத்தையடக்கிக்கொண்டு ஆட்டத்தைக்காணாதோரே
சுபனத்தினிஷ்டைதன்னிர்சொல்வதில்மாறிப்பாரே. (௨௦)

வேறு.

மாறப்பா இடகலையைவலதில்மாறு மகிமையுள்ளவலம்புரியைச்சுற்று
ம்போது, சேறப்பாயாகூவைச்சறத்திற்சேரு சிரசுதனில்சிறுவழியா
ய்ச்செலுத்திப்பாரு, பாரப்பா இருவிழியினடுவில்பாரு பரலோகப்
பெண்களுமேவருவார்பாரு, தேரப்பா அவர்கடிருப்பாதந் தொட்டு
தேர்ந்தவர்கள் திருவடியைச்சேர்வார்தானே. (௨௧)

## (ஐனெனும்கலிமாவின்பயான்.)

பஃறொடைவெண்பா.

தன்னையவன்றனாய் தன்னுணர்வுமவனாய்
பின்னையொருவெண்ணத்தால்பேதலிப்பேன்—முன்னே
ஆதமுதலெல்லோரு மாதிகலிமாவாகி
வேதமதுதானாய்வந்த பின்னர்—மூலமதில்
நாதமணிவிந்தாய் நல்விழியினுக்கத்தாய்
ஆதியலிபதுவேஅல்லா. (உஉ)

தோங்கல்.

அல்லா கூ வென்னுமெழுத்தானது அருமையிருவிழிமேல்வட்டமாய்
நல்லாரதன்விதந்தனையறிய நாடித்தூங்கியேபார்ப்பவர்க்கு [து
வல்லான்றிருநாமமல்லாவது வடுவில்லாவெள்ளையெழுத்துப்போலா
சொல்லாரகசியங்காட்டிநின்று சோதியொளிவாகயிலங்கிடுமே. [ய்

வேறு.

சோதியெனுஞ்சுடரொளிவுதரித்தவாறும் சொரூபமதாய்நாதவிந்து
தோன்றுவாறும், நீதிபற்றபாளுடப்பில்நிலைத்தவாறும்நெரிமுத்துப்
போலெனவேதிரண்டவாறும், வேதமாமுப்பொருளாயமைந்தவாறு
ம் வேட்டுவனைப்போற்புவியில்பிறந்தவாறும், ஆதியிலேயலிபதுவாய
மைந்துநின்று அல்கம்து வெனுமறிவாய்வந்தோங்கேளே (உச)

தோங்கல்.

அல்கம்துவென்னுமறிவானது ஆதி தனிலாதம்சொன்னதாகும்
சொல்லுங்கலிமாத்தானதிலேநின்று சோதிபோலெங்கும்பரந்ததா
கும், நல்லபேருகளதின்பொருளை நாடிநபுசதையொடிக்கிவந்தால்
எல்லைமூலத்தின்கலிமாவது இலங்கிமுத்தைப்போற்றுலங்கிடுமே.( )

(மூலர்தாரத்தில்முளைத்தெழும்பிய கலிமாவின்பயான்.)

தோங்கல்.

முத்திரையானமூலமதில்மோனக் கலிமாவில் லாவென்றது [ப்
கத்திரிக்கோலுபோல்கதித்தெழும்பிகருணைவிருலோகமிருவிலாவா
முத்திரையாம்வலதுமார்பில்வந்து முதலாம்ஈயென்றஅலிபானது
சத்திரமாந்தொண்டைப்பள்ளம்வந்து சலித்துஇலாகவென்றேறிய
பின். (உரு)

சித்திரமூளையின்றலத்தைச்சுற்றி செனத்து இல்லென்றஅலிபானதி
கத்தர்முகம்மதுதலமாகியகருணைத் தாமரைக்கமலம்வந்து
தத்திரமாகவேகீழிறங்கித்தரளமணி மூலம்வலமாய்ச்சுற்றி
முத்தர்முச்சுளிமுனையில்வந்துமொழி யிலல்லாவாய்வெளியானதே.

ஆனகலிமாவின்பின்பாதியிலாதி யல்லாவின்றாதரசனோர்
மோனமுகம்மதுநாமநாலோடு முடிவுறரூஹுல்லாஎட்டுஞ்சேர்ந்து
ஞானேடிருப்புக்கைகாலுடனே சங்கைத்தூலமாய்ப்பிறந்தவிதம்
ஞானக்கல்வியிலாசிப்போர்க்கு எழுத்தின்றொகுதியையெடுத்துரை
ப்பேன் (௨௮)

வேறு,

பிந்தியகலிமாமுதல்மீம் பிரிவில்லாத்தலையுமாகி
சொந்தஹேதோளதாகி சுழண்டமீமிடையதாகி
வந்ததால்காலதாகிவளைந்தறே விலாவுமாகி
அந்தசீன்தனமுமாகி அஹதிய்யாமணியுமாச்சே. (௨௯)

ஆனவாவஹ்தத்தாகி அதுதசையிரத்தமாகி
மோனலாம்வாகிதிய்யா மூளைத்ததுமுகமேரூபம்
தானலிபுநாட்டமாகி தலைநெற்றிநடுவுள்ளூகு
கோணலாங்குருவுமாகி குறிப்பிடுங்கயாத்துமாச்சே- (௩௰)

குறித்தலாம்மூலமாகி குண்டுகேகல்புமாகிச்
சரத்துடன்ஜடலமான சட்டையைப்பூட்டிவந்து
வெறுத்திடாவண்ணமாக வேந்தனேவைத்தநாமம்
திறத்தவன்வாயல்நோக்கித் தேடினோரல்லாவென்றார். (௩௧)

தோங்கல்.

அல்லாகூவென்றஇசுமானது ஆதிநாயனின்றிருநாமமாம்
சொல்லா பிகிலென்ற செயலானது சோதிமுகம்மதுநாமமாகும்
வல்லாஹறுபென்றகட்டுதலே வள்ளல்கக்கிக்கத்துத்தாலுமாகும்
எல்லாமொன்றாகிசேர்ந்துதானே இலங்குங்கலிமாவாய்வந்ததுவே

(கக்குடன்சேர்வதைப்பற்றியது)

---

கலித்துறை.

கலிமாமறந்தனில்மாய்கைக் குழிகடந்தேறியவன்
ஒலியாகியெங்குமோரொளிவாகி நிற்பவனேடொன்றிடுவான்

சலியாதுகாயமழியாது வேயது சாவில்லைக்காண்
மெலியாதுகமலம்வெளியாகுங் கூவென்றோதுவரே (௧௩)

ஆதானமாயசுருட்டை யெல்லாம்விட்டுசுவாஷமதை
ஊதாமலூதிஉள்வீடு மூலக்குகையடங்க
வேதாந்தமாவின்விதியறியும் பாதையைவெளிப்படுத்தி
ஆதாரங்காட்டு மொளிவாகவந்தறிவித்திடுமே. (௧௪)

தெரிவானஉஜூதுகருவான வீடுதனிர்த்தேன்பொழியும் [ல்
பொருளானமகுருக்குப்பொற்பாதப்பணிந்துபோற்றிசெய்தா
அருளானகலிமாமலர்போல ஐன்நடுவிலலங்கரித்து
குருவாகமூலமதிலுபதேசஞ்செய்தமுதூட்டிடுமே. (௧௫)

## ஈரடிவிருத்தம்.

மூலமூடு தன்னையறிந்து ஹாஹாவென்றேன்
முத்திதரும்கல்பறிந்து ஹீஹீ யென்றேன்
பாலமதுதான்கடந்துயா ஹூவென்றேன்
பரிபூறணப்பதிதனிலேபாலுண்டேனே. (௧௬)

முத்துகொட்டைதனிலிருந்து கூ கூ வென்றேன்
முகத்திசென்னும் பள்ளிசென்றுதொழுதுகொண்டேன்
பத்தியுள்ளஐப்பத்தஞ்சுபடிகடந்து
பரலோகப்பதியில்முப்பாலுண்டேனே. (௧௭)

## கோச்சகம்

பாலகனுயிவ்வுலகில்பயித்துமூன்றுவயதுக்கப்பால்
சீலமுள்ளசெய்குருவைச் செங்கமலப்பதியில்வைத்து
கோலமுள்ளகுருவீட்டைக் கூர்ந்துநன்றாய்பார்த்திடவே
ஆலமெல்லாம்கலிமாவாயறிந்துகொண்டேன்நாயகனே. (௧௮)

## (கலிமாஉட்பொருளின்சுருக்கம்)

---

## வெண்பா

அறிந்தபடிசொல்லைஅல்லா அருள்கலிமா
விறிந்தபலபொருள்வி[illegible]—சிறந்தபொருள்
ஜெகத்துள்ளோரறியச் சிந்தையதுதெளிய
வகுத்துச்சொல்வதறி (௧௯)

### தோங்கல்.

லாயிலாவென்னும்பொருளானது லாவேறுநாயனில்லையாச்சு [ச்சு
துயயில்லல்லாவென்னும்பொருள்தோணும் வஸ்தெல்லாமவனுமா
வாயில்பொய்சொல்லித்திரிபவரே வழிகெட்டபேரென்றறியலாச்சு
நாயன்சந்திப்பைநாடுவோர்கள் நபுசையறிவதுகடனென்றார். ()

### வேறு.

ஆனமுன்னுதித்துப்பின்னல் அஹ்மதுமுஹம்மதென்ற
தானவர்நாமத்தாலே தரணியில்மனுக்கோலமாய்
ஞானுடன்பிறப்போர்றிருப்போர் சகலுயிர்மனுக்களெல்லாம
கோனிறைதூதரென்று குருகல்பால் கொளிப்பாரு. (சக)

பாருநீகலிமாவேருபண்புள்ளோன் முகமேயாகும்
கூருள்ளபணர்களெல்லாம் கொற்றவன்படைப்புமாகும்
ஏறவேமறமுமான இறைநபிமகுமூதாகும்
தேறியகல்பால்வேணைத்தளுவினோர்தெரிந்துகொள்வார். (சஉ)

### கலிவிருத்தம்

வேர்மேலதுதலைசிழது வேதம்விளைவதுவாம்
தேர்மேவியவிலைமேவிய யாரும்புகழரிதாம்
ஏர்மேவியவாசிதனில்யாகூ வெனும்வளரும்
பேர்மேவியகலிமா மறம்பிறவிப்பெருமறமே (சங)

நேரியால்வருஞ்செயலேபல் நிலமாமுலகிடையே
அறியாமலேஅதின்வேறது கிளைமுளையென்பார்
பிரியாதெழுசிபத்தாகிய பெருநீரினால்வளரும்
பொறியாமையறிவேதளிர் பூத்தேமரம்வளரும். (சச)

### கோச்சகம்

மறமேறும்பேருகனை மற்றொருவரேற்றாமல்
திறமாகத்தானேறித் தீன்கனியைபறிப்பதுபோல்
சறமரத்தைப்பிடித்தேறிச் சர்க்குருவைப்பார்ப்பவர்கள்
அறம்பொருளினிம்பமூன்று மனுபவித்திருப்பாரே. (சரு)

இருப்பார்களிவ்வுலகிலெதிர் பேச்சுபேசாமல்
வெறுப்பார்கள்துன்வாவோடு வேற்றுமையும்விட்டொழிந்து.

நெருப்பானயெண்ணங்கொண்டு நெஞ்சிலஞ்சிலொன்றைநாட
கருப்பானகசட்கருகிக் கருத்தறிந்து கொள்வாரே. (௪௬)

## வேறு.

கருத்தறிந்துகலிமாத்தில் தானேறிபோகி
கருணைபெரும்மதியமிர்தப்பா லதனையுண்ண
பொருந்தமதாயருள்விந்து நாதமதுதானும்
பூரணமாயிலங்குஞ்சுளி முனைவீட்டைப்பாரே. (௪௭)

சொன்னபடிசுளிமுனையைப் பார்த்துணர்ந்து வந்தால்
சூட்சாதிசூட்சமெல்லாந் துலங்கிவரக்காண்பாய்
விண்ணுலகம்மண்ணுலகம் வெளியாகித்தோன்றி
வேதாந்தக்குருக்களுமே வெளியாகிச்சொல்வார். (௪௮)

பொன்னிலங்குங்கலிமாவின் பொருளையறிந்தோனே
பூவுலகில்இன்சானின் காமிலுமேநீயாம்
தன்னுளத்தின்பொருளறியார் தானும்காக்கிசாகி
தளுவியதின்பொருளைச் சொல்லதடுத்து வல்லவென்பான். (௪௯)

## கோச்சகம்.

அதுவல்லவிதுவென்ற லாயில்லாவின்தெளிவை
பொதுவுள்ளகவுசைனி புருவத்திடைநோக்க
மதியுள்ளமூலமணி மலர்ந்து கலிமாமரமாய்
கதிர்மதிபோலெதிர்வந்து கலக்கத்தைத்தீர்த்திடுமே. (௫௰)

## வேறு.

தீர்த்திடுங்கலிமாத்தன்னை தெளிவுடனேக்குவோரை
எத்திடுமேழுவானமிறை யொளித்தன்னைப்பார்க்க
தோத்திடுங்ககனமேழும் துலங்கிடும்பூமியேழும்
சாத்திரவேதக்கல்விசகலமுந் தெரியலாமே. (௫௧)

## (மெய்க்குருவையும் பொய்க்குருவையும்) விபரித்தல்.

தெரிந்தவர்முன்னிற்சென்று தீர்ச்சையைப்பெருவாயாகில்
இருந்துவந்திடத்தைக்காட்டி யினிபுகுந்தலத்தின்பூட்டை

திறந்துஉட்புகுந்துப்பார்க்க திறவுகோல்தருவார்பாரு
அறிந்தவரிவரோயென்று அடிபணிந்திருப்பாய்தானே. (௫௨)

தானவன்றன்னில்பாரூர் தான்வந்தவழியைக்கூறூர்
ஈனமாம்வயிற்றைநம்பி இறையதுதேடவோதி
மானிடர்மெலிவிற்சென்று மயங்கிடக்கதைகள்விண்டு
கூனிக்கோல்பிடித்தசெய்கை கொடியபொய்குருவென்றெண்ணே.()

## கோச்சகம்.

பொய்சொல்லித்திரியுஞ்சில பொய்வேஷசெய்குசொல்லால்.
கைசேதப்பட்டவனுய் கலங்கியேநின்றுசில
வைசெல்லாமிவ்வுலகில் வம்பாகபோக்கியபின்
மெய்சொல்லும்முருசிதனுல் மெய்யறிவையறிந்தேனே. (௫௪)

அறிந்தபின்னர்வெளியறிவை ஆசையுடன்கற்றுக்கொண்டு
திரிந்துபணம்பறிப்பவரை திருடரென்றுகண்டுஅப்பால்
பிறந்தவகைதான்பேசிப் பெரியவனிலாசைகொண்டோர்
மறைந்தபொருளறிந்தவர்கள் மானிலத்திலவரூமே. (௫௫)

## விருத்தம்.

மானிலத்தில்மசாயிகென்னும் ஆலீமென்னும்
மகிமையுள்ளதுயில்களையுமணிந்துகொண்டு
கோனிடையன்கோல்பிடித்து ஆடுமேய்க்கும்
கொத்தவண்ணம்குருஆனேடுகநீதுமோதி
போனிடத்தில்பொல்லாங்கை யுண்டுபண்ணி
புல்லருக்குப்பொய்யானமுரீதுசெய்வார்
ஞானமில்லையவர்கையிலிடரோயல்லால்
யாவருமேயறியவுடற்கூறைச்சொல்வேன். (௫௬)

உடலெடுத்ததெளிவுகண்டோருண்மைசெய்காம்
உற்றுணர்ந்துபாருதோருருதிகேட்டோர்
சடலத்துள்ளாட்டுகின்ற நகைக்கண்டோர்
சகலவர்க்குஞ்செய்கானகுருவுமாவார்
குடலெடுத்தபசியறிந்தோர் குணத்திலாவார்
குருவிருக்குந்தலமறியார் குருடராவார்
கடலதுபோல்பொங்குங்கரு வீட்டைநோக்கிக்
கலிமறத்தைகாண்பவர்கள் காமிலாமே. (௫௭)

## (கலிமாவெனும்மொழிபிறந்தவிபரம்)

வேறு.

காமிலே அல்லாவாகி காட்சியில்கோலமாகி
ஜாமிகுஇசுமுபாகிச் சாத்தொண்ணு வண்ணமாகி
ஹாமிதுமுகம்மதாகி கதிகலிமாவே ஆசை
ஆமண்ணிணுடைபோற்ற ஆசமாய்நாமளானும். (௫௮)

ஆகமாய்நாமளாகி ஆள்கின்றகுறிப்புத்தன்னில்
நீதமோடுநெறிவேதத்தோடு நேர்மையாயருளக்கேளு
ஓதவேவேதமாகியுலகினுட்டுலக்கிநிற்கும்
ஆதியாம்மறத்தின்மூடு அடிநம்முளாளுமூலம் (௫௯)

## (மூலாதாரத்தின் மகித்துவங்கூறல்)

விருத்தம்

அடியான ஆகமதுவளர்ந்தமூலம் அல்ஹம்து வெனுமறிவுபிறந்த மூலம், வடிவாகும்கோலமதுவளரும்மூலம் வளர்ந்துவருமாயிரத்தெட்டிகழுமூலம், குடியானகலிமறமேவளர்ந்தமூலம், குருவென்றும் முரீதென்றும் பிறந்தமூலம், முடியானமுச்சுடராக் துலக்குமூலம் முறுஷிதைமுன்காட்டுவது மூலமாமே. (௬௰)

ஆதியென்றுமறைதியென்றுந் தரித்தமூலம் அகமதென்றும் ஆதமென்றும்பிறந்தமூலம், சோதியெனுஞ்சுடரொளிவுசூழ்ந்தமூலம் சூட்சாதிசூட்சங்களைத் துலக்குமூலம், ஓதுகின்றவேதமதுபிறந்தமூலம் உண்மைசூருகுதுசியின்றலைமுமூலம், வேதமாமுப்பொருளைக்காட்டுமூலம் விழிநடுவெளிப்படுத்துமூலமாமே. (௬௧)

தோங்கல்.

மூலக்கலிமாத்தான் முழுமறம்போல் முடியாவாசமாய்நின்றிடவே கோலக்கூவென்ற சுளிமையைச்சுற்றி குருவாமரசன்முன்சென்றிடவே சாலப்புகழெல்லாஞ் சார்ந்தசொல்லாய் சாற்றுமட்சரமெட்டொன்றாகி, கோலஅலிபுடன்லாமுங்ஹேயுங்கோர்த்தமீமுடன் தாலுமைந்தே. (௬௨)

அஞ்சுகருபானதானுக்குப்பின் றைநிலாமுடன்பின்னேருலாம்
தஞ்சமலிபுடன்ஹேயுங்கூடி தகப்பனுதத்தின்வாயிலோடி
அஞ்சிஅல்ஹம்துலில்லா வெங்க அல்லாபிறகமகு றப்புக்கென்க
கொஞ்சியா ஆதமென்றுகூற கூடும்ஹறுபெட்டும்கருமூலமாம். (௬௩)

கருவாம்மூலத்தில்மறமுளைத்து கதித்துஐந்தெழுத்தாய்வளர்ந்து
குருவாம்நேசமே நாதமுமாய் சுப்புஆசைதான் விந்ததுமாய்
மருவிநேசாசைநாதவிந்தாப் மண்ணுங்கருபூமிதன்னில்புக்க
உருவங்கவிநாதன் விந்துங் கூடி வுள்ளவெழுத்தஞ்சால்துள்ளிவந்தோம். (௬௪)

வந்ததாலுதான்மண்ணுமாச்சு வல்லோன்கலிமாவில்லாவென்றுச்சு
சொந்தமீமது தண்ணீராகிச் சோதிக்கலிமாவில் பிலாகவாச்சு
மூந்தவோசையெற்றேஹே வோமுதலோன் கலிமாவில்பில்லாவா
ச்சு. பந்தம்லாநெருப்பு அல்லாவாகிபகா அலிபுகூவாகாசமே. (௬௫)

(ஐந்தெழுத்தால்தூலமுற்பத்தியானவிபரம்)

---

வெண்பா

அஞ்செழுத்தால்தூலமமைந்து வந்தோனின்சான்
வஞ்சிமறந்தன்னின்வகைகூற—நெஞ்சகத்தால்
நித்தநித்தமும்முணர்ந்து நேச்சுவைத்தேபடிக்க
சுத்ததூலமறியலாம். (௬௬)

வேறு.

தாலுறண்டுகாலுமாகிதரித்தமீமுவயிரதாகி
சோலஹேயேதோழதாகி குறித்தலாமுவாயதாகி
வாலலிபுகண்நடுவில் வளைந்துநின்றவாறதை
சீலமுற்றுப்பார்க்கவே சிறந்த அல்கம்தானதே (௬௭)

ஐம்பத்தொரட்சரமனைத்துமோரலிபதாய்
இம்முற்றதிக்கிறேடுவேதம்நாலுமொன்றதாய்
கம்பமற்றமூலத்தில்கருத்தெழுந்தகதிரது
சம்புபோலவே வளர்ந்துசமைந்த அல்ஹம்தானதே. (௬௮)

ஐந்துமூன்றுமெட்டதே யனாதியாதிசோதியாய்
ஐந்துமூன்றுமெட்டினாலாலமடங்கலமைந்ததால்
ஐந்துமூன்றுமெட்டினால் அப்பன் அம்மைபிறந்ததே
ஐந்துமூன்றுமெட்டுநாலுமறியவோரலிபுள்ளே. (௬௯)

வேறு.

அலிபதுமூலமாகியரியொனாமெழுத்துமாகி
அலிபதுமூலமாகி ஐந்துமூணெட்டுநாலாய்
அலிபதுமூலந்தன்னிலமைந்தது நாதவிந்தாய்
அலிபதுநாதவிந்தையறியவே கோலமாச்சே. (௭௦)

கோலமாயுலகம்வந்த குறிப்பதை அறியாய்பொய்யர்
ஞாலத்தைக்கண்டுசார்ந்தோர் சதிவினிற்சிக்கிச்சாவார்
தூலத்துள்ளாகின்கோலந் தொடுத்ததைச்சிந்தையாலே
ஆலத்தின்தீனோரெல்லாமறியவே யுரைத்திட்டேனே (௭௧)

## (கலிமா நான்குபாதையையும் தூலகோலத்தையும்)
## பொதிந்துவந்ததின் விபரம்

### வெண்பா.

பத்தியுள்ளகலிமாப்பாதை நாலைப் பொதிந்து
பத்துநாலுலகைத்தான் பொதிந்து—சுத்த
சுருதிமறைநாலோடு சூழ்ந்தஐம்புலன்கூடி
உருதிதூலமானதே. (௭௨)

### தோங்கல்.

கலிமாமூடுதான்சரிஅத்தாகிகருணைபிறப்போகும்பாதையாச்சு
யிலமாந்தரிகத்துகொப்பதாகிபேரின்பங்கொண்டோர்பிடிக்கலாச்சு
நலமாம்ஹக்கிக்கத்துயிலைபதாகி நாடித்திரிவோர்க்குநிழலுமாச்சு
சலியாக்கனியது மகரிபத்தாய் சார்ந்தபேர்களைச் சேர்க்கலாச்சே.()

கலங்கும்லாவதுசரிஅத்தாகி ஹக்குகலக்கையும் வேறுக்கலாய்
இலங்கும்யிலாகது தரீக்கத்தாகி எங்குந்தேடியேதிரியலாச்சு
நலங்கொள்யில்லாதான் ஹகிகத்தாகிநல்விடந்தன்னைநோக்கலாச்சு
அல்லாதான்மகரிபத்தாய்பாதைதனைநன்றாயறியலாச்சே

சரிஅத்தான துதையூடாகிச் சகலபேரையுஞ் சேர்க்கலாச்சு
தரிகத்தான துசஹாதத்தாகித் தன்மைப்பட்டோரின் பாதையாச்சு
கருவாம்ஹகிக்கத்துதம் ஜிதாகிக்கருணைப் பேரின்பக்கடலதாச்சு
மருவில்லாமகரிபா தெளகிதாகிமணிமுத்துமண்டபந்தானுமாச்சே ()

நல்லநர்விலேசொல்லானது நன்மைசரிஅத்துத்தானுமாச்சு
வெல்லஅமலானசெயலானது வேதத்தரீக்கத்தாய்விதியுமாச்சு [ச்சு
பொல்லாநபுசதையொடிக்கிகொண்டு பொருந்திநடப்பதுஹகீக்த்தா
அல்லலறுத்திடுஞ்சிற்றுனது ஆதிமகரிபாத்தானுமாச்சே (எசு)

சரிஅத்தானதுதொலியாகியே சகலவடுவையும் போதியலாச்சு
தரிகத்தானதுதசையாகியே தந்ததொப்பியே நடக்கலாச்சு
கருவாம்ஹக்கிகத்துயெலும்பாகியே காமப்பேரின்பம்நடக்கலாச்சு
அருமைமகிரிபாமூளையாகி ஆதியொளிவதுதானுச்சுதே (எஎ)

சரிஅத்தானதுவாயாகியே சகலகல்வியும் பேசலாச்சு
தரிகத்தானதுவிருகண்ணுகி தனதுபொருள்தேடிப்பார்க்கலாச்சு
அரியஹகீகத்துமூக்காகியே ஆதிவாசத்தைமுகக்கலாச்சு
நெரியாம்மகரிபா காதாகியேநெஷன்சத்ததைக்கேட்கலாச்சே (எஅ)

சரிஅத்தானதுமண்ணுகியே சகலபடைப்பையுஞ் சேர்க்கலாச்சு
தரிகத்தானது தண்ணீராகி தழுமைதீமையைக்கழுகலாச்சு
கருணைஹகீக்கத்துகாற்றாகியேகற்றோன்றிருவுளமெத்தலாச்சு [ச்சே
மறையாம்மகரிபாநெருப்புமாகி மணிமுத்துவிளக்கையுங்கொழுத்லா

வேறு.

மணிமுத்துவிளக்கதைக்கொளுத்திக்கொண்டு
மலறும்வாசியைமாற்றிக்கொண்டு
கணிவித்துமூலத்தைநோக்கிக்கொண்டு
கண்ணின்பார்வையையேற்றிக்கொண்டு
பணியுற்றமுரிஷிதுகோலமதை
பார்வைநடுநிலை பதிந்துகொண்டு
அணிமுத்து அலிபதில்சாதித்திட
அவ்வற்கலிமாவை யறியலாமே. (அயி)

வேறு.

சாதனமில்லாவிட்டால் சற்குருதன்னைக்காணர்
சோதுவிற்சுவாசந்தன்னைச் சோம்பியேபோக்கிடாமல்

யாதுடன்யாரூவென்று இருவிழிநடுவைனோக்கி
நீதமாய்நடத்திவந்தால் நெறியுள்ளகுருவைகாண்பார். (௮௧)

நெறியுள்ளகுருவைக்காண நேத்திரம்நடுவைநோக்கி
குருவுள்ளமூலமான குகைமணிமண்டபத்துள்
சொரியிருமூச்சைவாங்கி சுழட்டியேயேற்றிபார்க்கில்
தெரியவேகுருமுன்வந்து தேனும்பால்தீத்திவைப்பார் (௮௨)

வைப்பவர்சமுகஞ்சென்று வாடிருபதத்தைமுற்றி
மெய்ப்பொருடன்னைக்கேட்டு மேல்வினைமுழுதும்நீக்க
கைப்பொருளவிபுவொன்றைக் காட்டுவார்கருதிப்பார்க்க
வைப்பொருளுள்ளவீட்டின் வாசலுந்துறக்ககாண்பாய் (௮௩)

வாசலுந்துறந்துதானே வருகுவாரனந்தங்கோடி
தாசிகள்போலேவண்ணந் தரித்துநின்றாடிப்பாடி
நேசமாய்வாசம்பூசி நெருங்கவேவருவார்நாடி
கூசிடாவண்ணமாகக் குருமுன்னில்பார்த்துக்கூடு (௮௪)

கூடியேயவர்கள்பின்னால் கொளுகியேநடப்பாயாகில்
வாடியமயக்கந்தீர்த்து வாள்வுடன்வழியைக்காட்டி
நாடியவிடங்களெல்லாம் நற்புடன்காட்டியின்னம்
தேடியசொர்க்கங்காட்டித் திருவிகாதன்னிற்சேர்ப்பார் (௮௫)

திருவிகாதன்னிற்சேர்ந்தோர் தெளிவுள்ளதங்கம்போலாய்
இறப்பவரில்லைவிட்டு யிருளறைமண்ணிற்புக்க
தரிப்பிடமங்குமிங்கும் தானவர்வருவார்போவார்
அர்ப்பருக்கவரேதோணா றறிவுள்ளோரவரைகாண்பார் (௮௬)

தோங்கல்

அறிவையுணர்ந்தவனாரிபாவானறவேயறியாதான் மூடனாவான்
நெறியாம்ரூஹதையறிந்தவனே நேசவொலியென்றபேர்பெறுவான்
பெரியஅலிபுதான்பிரீடபூடே பிண்டந்தனில்வந்துசுற்றுவதை
உரியவிருவிழிநடுவைநோக்க உலகவஸ்தெல்லாந்துலங்கிடுமே(௮௭)

துலங்கும்விதந்தன்னையுரைக்கக் கேளுதுன்பாவேற்றுமைதொலைத்
துவிடு, கலங்கல்வேற்பாட்டைவிட்டொழிந்து ஹக்கனொருவனி

லொன்றுபடு, வலங்கள்சுற்றியேவரும்வாசியை வல்லோன்முன்னி லேசேர்ப்பிவிக்க, இலங்கிநாலிதள்மலருந்தோன்றி யின்னமெட்டா தகனிகிட்டுமே. (அஅ)

வேறு

இன்னமுஞ்சொல்லக்கேளு யிறையொளிதன்னை நோக்க
தன்மனமோர்மையுற்று தானென்பதவனிலாக்கி
திண்ணமாயிருப்பமோடு தேகத்தையொடுக்கியேநீ
ஒன்முகம்நடுவில்தப்பா துருத்துடன்குருவைப்பாரு. (அகூ)

ஒன்முகம்போலக்கண்ணாடிக் குள்வொருமுகங்கண்டாபோல்
சென்மயளுகின்சாய்கை சித்துநின்றடித்தோன்றும்
உண்மையாயறிந்துதன்னி லுறுதிபெற்றிருப்பாயாகில்
தன்னினைவடிவேமெய்யாய் தானென்றஞானியாவாய் (கூ0)

தோங்கல்.

ஞானியென்போர்க்குஅசுலாவது இரையைத்தன்னிலேதானுணர்ந் து,பானிதனைநீக்கிபகாவதனில் பதிந்தநினைவதைத்தாயுமாக்கி கோ ணங்குருதன்னைமுன்னிருத்திக் குதாயைநித்தமுங்கண்டுவந்தோன் ஈனமற்றிட்டஞானியென்று எங்கள்முகியித்தீனரபிசொன்னார் (கூக)

ஓதியறிவிக்குஞ்செய்தியறி யுடலுளுயிரதுதனக்கிடையில்
சோதிரூகதன்கோலமதை சுட்சவறிவாகவறிந்ததிலே
ஆதிஞயனினுள்கைதனை யன்புபிறியமாயறியும்வகை
நீதிமுசாகிதாமுடிவுமூன்றை நேசபாசமாய்நெருங்கிப்பாரே (கூஉ)

(ஒண்ணாவது முசாகதா கண்ணாடிபார்ப்பதின் விபரம்)

வெண்பா.

முடிவுமுசாகதா மூன்றுவகையுண்டுமெதில்
வடிவுகண்ணாடியைநோக்கிக்—குடிருகு
குருவின்முகமறியக் கூரும்வகையறிந்தோர்
மறைவன்றிப்பார்க்கலாம். (கூந)

### தோங்கல்

பார்க்கத்தெளிவுள்ளகண்ணாடியைப்பதிவாய்முன்னிலேவைத்து அதில், கூர்க்கவொன்முகம்பார்ப்பதுடன் கூர்மைக்கல்பாலுண்ணாக்கைநோக்கி, தீர்க்கமாகவேவயிலாகி அந்தத் தெளிவுமக்கூதிளனுந்திக்கிறை, ஏர்க்கதூமுதிரம்நாளொன்றுக்கு இயல்பாய்நாற்பதுநாளோதுவாய். (கூச)

ஓதிஇவ்விதமிரவுபக லோர்மைபாகவேபார்த்துவர, நீதித்துயில்வெள்ளைபோலுண்ணாக்கு நிசமாகருபத்தொருநாளைக்குள், சோதுவன்றிபேகண்டவுடனே சோதிகண்ணாடி தன்னிலொன்னின், ஈதுமுகத்துக்குவலப்பக்கமாய் எதிரியொருமுகங்காணும்பாரு. (கூரு)

பாருநால்பதுநாளைக்குள்ளேபதருபோலுள்ள அழகுரூபம், சீராயுன்னுடமுகத்தைநோக்கி சிறித்தவார்த்தைபாய்பேசும்பாரு, யாருஅவ்விதப்பேசுவார்கள் அன்பாயதுபேசும்போலெனவே, தீரக்கண்டபின்கண்ணாடியோடு தெளிவுஉண்ணாக்கைவிட்டிடுவாய் (கூகூ)

விட்டபின்றினமிரவுபகல் விரும்பியாயிரந்திரமோதவே
நட்டிக்கண்ணாடிபார்த்ததுபோல் நாடிமுன்னிலேபார்த்துவர
திட்டமாகவேவடிவுகோலந் தினமுந்தெரிசனைபாகிவரும்
மட்டிடாமலேஇதன்மகிமை மன்னன்மிகுராசில்நபிக்குரைத்தான். ()

நபிக்குவுரைத்ததோட் யிண்டாவது நாயன்தாத்தியாநாமமதை
சபிபாம்முசாகிதாசெய்வதைக்கேள் சடலமதனிலாளும்ருகதனை
கபியில்லாமலேவெளிக்கண்ணாலே கருதிபார்த்துநீயுருதிபெற
குபுவுவொன்சாகைதன்னைநோக்கி குருவையறிவகைகூறக்கேளு ()

## இரண்டாவது தரிசனம்சாய்கைபார்ப்பது

### வெண்பா

சாய்கைநிணல்பார்த்த சந்திப்பதின்வகையை
ஞாயமாய்ச்சொல்லல்தன்னைப்பார் — நேயருகு
சித்தமுஷன்முன்னே நேசம்வைத்தேபேசும்
சுத்தக்கோலமறியலாம். (கூஎ)

### தோங்கல்

சிறப்பாயலம்தறாயிலாறப்பிக்க சிறந்தகைபமத்தவில்லவென்
டுறைப்பாயல்லாகு குருவானிலைவுறைத்த ஆயத்தின்பொருட்படி
யே, வெறுப்பாயிருளைதைநீக்கவேண்டி வெளியில்சூரியனுதித்தபின்
னர், தறிப்பாய்மணிபத்துக்குள்ளாகவேதன்னினிழலின்கழுத்தை
நோக்கே. (௰)

கழுத்தைநோக்கியேயிலாகி அந்த கருணைதிக்காதைபதினோர்திரம்
உளத்தின்கல்பிலேயோதியபின் னுயரஒன்னேரில்வானநோக்கு
வெளுத்துஒன்னிழல்சாம்பல்நிரம் விரிவுநீளமாய்த்தோன்றுவதை
அளுத்தியவ்விதம்கமலையும் மடுத்துநாற்பதுநாள்பார்க்கவே ()

பார்க்கநாற்பதுநாளைக்குள்ளே பணிவாயொன்னிழல்போல்கருத்து
கூர்க்கக்குறிகியேதோனுவதை குருவாம்ரூகுடகோலமென்ன
நீர்க்கமாகவேமுடிகியது தினமும்தெரிசனைதன்னில்வந்து
பார்க்குமறியாதபாஷையாக அன்பாயுனதுடன்பேசிடுமே (௰௨)

பேசும்பேச்சதைநீயறிவாய் பின்னையொருவருமறியமாட்டார்
வேசைகவாவதைவிரட்டியேநீ விரும்புங்காட்டத்தையதனிடத்தில்
நேசபாஷமாய்க்கேட்டிடவே நேஸன்போலவேயதுநெருங்கி
கூசாவண்ணமாய்சவாபுரைத்து கூடிவரும்செய்தியறிவிக்குமே. ()

அறியவைப்பது வென்னதென்றால் ஆதியிசூருயில்வரும்வேளையை
தெரியநரகமுமின்னதென்று தேடுஞ்சுவர்க்கமேஇன்னதென்று
இரவலுலகத்தில்காட்டிவைத்து பெண்ணுங்நீகாமலிறங்கிநிற்கும்
குருவாம்ரூகதின்கோலமென்று கூறிவந்தார்களாறிபீனோர். (௰௪)

## மூன்வரூதுதெரிசனம் விளக்கின்றுளிர்ப்பார்ப்பது.

)(*)(

### வெண்பா

விளக்கின்றுளிர்பார்த்து வெற்றிபெரும்தன்மை
விளக்கமாய்க்கூறல்தன்னைப்பார் — பளக்கம்
பேசவருங்கோலம் பெரியகுருசாய்கை
நேசவிளக்கேற்றிப்பார். (௰௫)

## தோங்கல்

எற்றிவிளக்கின்முன் கண்டசாய்கை எதிரில்நிறுத்தியேபார்த்தவ
ளைப், சாற்றுயிலாகியபந்த மதுரூதியோடு சங்கைசுல்த்தானின்னசிறு
வையும், கோர்த்துக்கண்ணாடிபார்ப்பதுபோல் குறிப்பாயிரவிலோர்
சாமமட்டும், தோற்றுநாற்பது நாளைக்குள்ளே துதியாங்கோலமே
யெதிர்காணுவாய். (௱௬)

காணவிளக்கதுயிருபிளப்பாய் கானல்வெளிபோலே தோன்றிடவே
தோணுமவ்வெளிதன்னில்நின்று துணித்துஓர் கோலங்கருவலாகி
நாணமில்லாமல் வந்துதித்து நயமாவார்த்தைகள்கூறியின்னம்
வணிசிலசுவாலுனதிடத்தி லுறத்துகேட்பதையுற்றுபாரே (௱௭)

உற்றபாதையில்லாயிலாகா உருதியில்லல்லாவெனுந்திக்கிரின், சுத்த
வட்பொருளறிந்தவனைச் சூட்சமாகவேயித்தலத்தை, பத்திவிழிம
காம்மகுமுதென்ற பதியைநோக்கியேவந்தவன்யார், வெற்றிபெரு
ஞ்சலாமென்னில்நின்று விருப்பியொன்றோடுசேர்த்துச்சொல்வாய் ()

## வேறு

சொல்லெனக்கேட்டுநீயுஞ் சுக்ருடன்மறுஜவாபாய்
வல்லவன்மக்காம்மகுமூது வடிவுள்ள தலத்தைநோக்கி
நல்லவேசுல்த்தானசிறு நலமுள்ள திக்ரையோதி
யெல்லையில்நீயும்நானு மினங்கவேவந்தேனென்பாய் (௱௯)

உன்னதில்நான்யரென்று வுறத்துடன்கேட்கச்சொல்லு
குன்னதுதாத்தின்புறத்தில் குறிப்புள்ளசிபத்துவமும்
என்னிடம்தந்துநீபோ வென்றதுகியேயாகும்
ஒன்னிடம்பெற்றுக்கொண்டு வந்தவனேனென்பாய் (௱௰)

இப்படிசொல்வாயாகில் எதிர்கண்டரூபந்தானே
குப்புடனென்னைநோக்கிக் குருஞ்சிரிப்போடுகூறும்
தப்பிடாபார்வையாக தரித்துநீபார்த்துவந்தால்
ஒப்பிடாவாலிபம்போ லொன்முன்னேவருவேனின்றே ()

ஒன்னிடம்நின்றுநானு முலகத்தின்செய்திபொன்னின்
தன்னிடமாகச்சொல்லித் தனித்திடம்நுனைப்நின்று
அன்னைதன்மதுவைபிள்ளைக் கன்புடனூட்டுந்தன்மை
என்னுடமதுவொன்வாயிலெப்பவுமிந்திருப்பேன். (௧௧௨)

இப்பதிதன்னைவிட்டு பெயுந்துநீபோகுங்காலம்
முப்பதுமுணுமுள்ள முகவடிவாலிபன்போல்
அப்பதிசொர்க்கஞ்சேர்ந்து ஆற்றருமவீட்டுக்குள்ளே
எப்பவுந்தப்பா தொண்டனடிஷ்டனாயிருப்பேன்பாரு, (ககங)

## தோங்கல்

பாருயிவ்விதமறிந்தவனே பாழாமுடலுள்ளின்றுகறிந்தோன்
கூறியிருள்நீங்கவிளக்கேற்றவே குறித்தவஸ்துகள்காண்பதுபோல்
சீறியுடலிருள்தன்னைநீக்க சிறந்தவிளக்கது ருகாணதால்
நேரில்றுகதைக்கண்டவனே நிதமுஞ்சாகாமலிருப்பவனே. (ககச)

அவனையல்லாரு அவனுக்குள்ளே அஞ்சுவிதமானநிறமுண்டதில்
பவனுவஞ்சலோடுசெவப்புரெண்டுபசுமைபச்சைபோடுகெருப்புநாலு
தவனவெள்ளையோடஞ்சுமாக தானேபதில்வெளியானதஞ்சு
புவனவுலகத்தில்மண்தண்ணீருடுபுது துக்காற்றுடனெருப்புநாலே

நெருப்புநாலுக்குபின்னுமேலதா னேசவாகாசமஞ்சுமாச்சு, சிறப்பு
வுடலது இவ்வஞ்சினுல் சேர்ந்துவரப்பஞ்சபூதமாச்சு, இறப்புவீட்டி
னுள்தீபமேற்ற இதற்குவேண்டியதஞ்சுண்டதில், கொருபபுத்துண்
டுகோல்விளக்குயெண்ணை கூடத்திரியுடனெருப்புஅஞ்சே. (ககசு)

அஞ்சுவஸ்த்திலொருநெருப்பு அணைத்துபோகிலேநாலுபாழு, கொ
ஞ்சுமுடல்பஞ்சபூதமதில் கொருத்தவாகாசம்றுகொழிய, மிஞ்சிநா
லுமேபாழாகியயே மேன்மைதன்மதுதாழமுன்னுல், வஞ்சநாலேயும்
பெலமாக்கினேர் வல்லநாயன்முன்பவுசுபெற்றோர். (ககஎ)

வல்லநாயன்முன்பவுசுபெற்றோர் வஸ்துவொன்றையும்பழிப்பெண்
ணுர்கள், எல்லைமகாந்தன்னில் தானறிந்துஇறையைப்பிரியாமல் பா
ர்த்திருந்து, அல்லும்பகலுமேஅல்லாவென்று ஆசைபாஷத்தோட
ழைத்தவர்கள். சொல்லிமுடியாதசொகுசுபெற்று சூட்சமாய்த்தன்
னையறியச்சொல்வார். (ககஅ)

## கோச்சகம்

ஒன்னறிவாலொன்னை யுற்றுணர்ந்துநீபார்க்க.
பின்னையொருவரையும் பேசாயேநீனிசுதம்
அன்னைகெற்பப்பையுள்ளே அற்பவிந்துநீரதனுல்
பின்னேமனுவுருவாகிப் பேதுவழிவந்தாயே. (கககூ)

வந்தவழிதானுணர வண்டத்தனமும்பேசா
எந்தன்முதலென்வீடு யென்னுமொழிகூறுயே
சொந்தப்பிலத்தாலென்ற சுத்தவீரமெண்ணமாட்டாய்
ஆந்தமாதிகடந்த அகதளவிற்சேற்பாயே (௧௨௰)

சேர்ப்பாயிறைபருளால் ஜெகமெங்கும்முற்பத்தியாய்
வாற்பாகவர்த்ததுபோல் வடிவாகிவந்தோமே
ஆற்பாய்ப்பாரந்துநிற்கு மனுதொடுத்து எவ்வுயிரும்
கார்க்கின்றஅல்லாவை கருத்திலுறுதிகொள்வாய் (௧௨௧)

அல்லாவொருவனென்று அஞ்சிப்பணிந்திருந்து
இல்லல்லாவென்றே இருதயத்தோட்டொழுவாய்
சொல்லார்கள்சோம்பிகளுஞ் சுத்தமட்டிமாடுகளும்
செல்லார்கள்சிந்தைகொள்ளார் க்ஷேமமுள்ளஞானவழி ()

வேறு

சேமமுள்ளஞானமென்று செப்பித்திரியுமனிதரே
சாமமெட்டுத்தன்னிலே சமைந்தஐந்துவேளையை
நேமமாகத்தொழுவதோடு நினவினுலுணர்விருல்
நாமள்நாளைமகுஷர்தன்னில் நல்லமோட்சமடையலாம் (௧௨௩)

மோச்சமுள்ளபாதைதப்பி மௌனஞானியென்கிறாய்
காட்சிகண்டோராறடா கசடறுத்தோராறடா
சாட்சிசொல்லுந்தொழுகைதன்னை சரிகிவிடாதெடுப்பிரால்
மீட்சியுள்ளபாதைகூடி மெய்பரிவைச்சேரலாம். (௧௨௪)

சேரும்பாதைதன்னைவிட்டு செவிடுகுருடன்போலவே
ஊருங்காடுந்தேடியே யுழண்டுதிரியுமாடுகாள்
பாருஐந்துவேளைதன்னில் பார்வைநடுசுழிதனில்
தேரும்பாதைதன்னிற்சென்று தில்குருவைகாணலாம். (௧௨௫)

குருக்களென்றுகூடிகூடிக் கூக்கலிடுமனிதரே
சிறுக்குச்செய்யவேவுகின்றோர் செல்வக்குருக்களாவரோ
பறக்கும்வித்தைக்காட்டினாலும் பாரில்ஜெயித்தான் அவனென்றே
சொவர்க்கபதிசேர்ப்பிவிக்குஞ் சோதிநபியுஞ்செப்பினார். (௧௨௬)

செப்பும்வார்த்தைதன்னைக்கேட்டு சிரசில்வாழும்ருகதை.
யொப்பிடாதவாலிபன்போலொருபொழுதுமறந்திடா

தப்பிடாதபார்வையாகத் தன்னில்தன்னையறிந்தவன்
குப்புவைத்துக்கொடுப்பவத்தைக் கூறியுலகர்க்குரைக்கிறான். ()

கோச்சகம்

பாவங்கொடும்பாவஞ்சொல்லப் பாரிலுள்ளோர்க்கெழுங்காணும்
யாவத்திலுமேலான ஈமின்சானைப்பழிப்பதுவாம்
சீவனுந்தடங்கலையுஞ் சிறப்பாகயெண்ணுவது
பூவுலகிலுள்ளோர்க்குப் பொருத்தகடமையென்றார். (௧௨அ)

## எவ்வஸ்த்தையு மொன்றாய்ப்பாவித்தரிந்த செய்குசிபுலிறகுமத்துல்லாவின் இக்காயத்தைப் பேசல்

வெண்பா.

ஜெந்துகளியாவற்றையும் சிந்தையினிலொன்றாக்கி
சிந்தித்தோர்காளே செயம்பெறுவார்—வந்தவரில்
முரிசிதுசெய்குசிபிலி மவுத்தானபின்நடப்பின்
வரிசைகூறலறி (௧௨௯)

தோங்கல்

வரிசைப்பிறான சேகுசிபிலி வயசுத்தவணையுந்திரவுமே
அரியபெரியவர் அல்லாயிடம் அரிகிலாசிக்காய்சென்றவுடன்
உரியஅவரசுகாபொருவருறக்கந்தூக்கத்திலிருக்கும்வேளை
பெரியசேகொலியவர்மனுமில் பேசிவுசாரதுசெய்யலுற்றார் (௧௩௰)

வேறு

உஷாரதுசெய்யச்சீஷனுறுத்துடன் கேட்கலுற்றான்
மஷாயிகுவொலியேயெந்தன் மனதுள்ளந்தெளிப்பித்தோறே
பஷாரத்தைப்புடைத்தறப்பின் பதிபத்திநடந்தபீரே
விஷாரிக்கும் றப்புவும்மை வரிவித்தசெய்திசொல்வீர் (௧௩௧)

வரிவித்தறப்புபென்னை வரிசையின்றலத்தில்வைத்து
கிரிவித்துக்கேட்டசெய்தி கீர்வதைம்கேளுங்காணும்
அரியவனென்பேர்சொல்லி யழைத்துவொன்பாவமெல்லாம்
சரிஎன்றுபொறுத்துக்கொண்ட சபபதைச்சொல்லுமென்றான்

### தோங்கல்

சொல்லுஞ்சிபிலியென்றவன் கேட்டிட சுருக்கில்சாலிகின் அமலாவெனென்றேன், அல்லவென்றதைநீக்கிடவே அடுத்துநான்செய்தபிகுலா சென்றேன், வல்லோனானதுவுமேயல்லவென்க வருந்திநான்செய்தவூச்சோவெலென்க, கல்லா அப்படியல்லவென்றான் கருதிநான்செய்தவெதாழுகையென்றேன். (௧௱௩)

விண்டவார்த்தையுமல்லவென்றான் விரும்பிநான்சொன்னமொழியாவது, மண்டுமனைவிட்டுயில்லைமைத்தேடி மயங்கிநீளமாம்சபருவெலன்றேன், அண்டர்கோனது அல்லவென்க அவனையடுத்துநான்கேட்கலுற்றேன், என்றுமாழ்பவாளனதுபாவ மிறங்கிப்பொறுக்கமலிதுவேகண்டேன். (௧௱௪)

ஆதிநீர்செய்தபாவமதை அமலால்மன்னிக்கயில்லையென்றான் வேதநாயனேயெனதுபாவம்விரும்பிமன்னித்தவெலதுவாவெலன்றேன் ஹாதிரியெனைநோக்கிபகுதாதில்நீர்கடையிந்தெருவீதிபோகையிலே கூதல்பொறுக்காதகுட்டிப்பூனை கொடிகிச்செவத்தோரமொதுங்கக் கண்டீர். (௧௱௫)

ஒதுங்கிக்கிடக்கின்றகுட்டியைநீ ருருக்கஇறக்கத்தோடெடுத்தணைத்து, மெதுவாயுமதனைச்சட்டையிலேமெள்ளயிருவென்று ஆதரித்தீர் அதுவின்குளிரதுநீங்காத்ததால் அடுத்துபறனிலுமேற்றிவைத்தீர் இதுவின்காரணத்தாலுமது வெந்தப் பாவமும்நான்மன்னித்தேன்()

### கோச்சகம்

எந்தவஸ்திலுள்ளதையு மேதனிடஞ்சேருவதால்
அந்தவஸ்திலொன்றை யலச்சியமாயெண்ணுவது
முந்தமுன்றைப்பொதிந்த முன்னோனைப்பழித்ததென்று
சொந்தவாடாலேயுறைத்தான் சுருதிகதிதிருகுதுசியிலே.(௧௱௬)

## மேலான தவத்தின்பயன்

### வெண்பா

ஆலநபிவாக்கால் அருலாவின்றொழுகைதனை
சீலமுடன்சொன்னசெய்தியதை—ஞாலமுன்னோர்
தொகுத்தறியவேசொல்ல துய்யோனேஎன்னுவின்
அகத்துளிருந்தருள் (௧௱௮)

### கோச்சகம்.

எல்லா அமல்களினு மெத்தகவமேதுவென
அல்லாவாயாலமெல்லா மறிவிப்பதென்றறிந்து
பொல்லாதவேறெண்ணத்தைப்போக்கித்தன்னுள்நோக்குவது
வல்லானைக்கண்டுதொழும் வணக்கமிது ஹக்குசொன்னேன் ()

ஹக்குவேறுகல்க்குவேறாய் காணுங்கண்ணுசெண்ணமதை
பக்குவத்தோடேநீக்கிப் பரவெளியில்த்தானேக்க
சக்குத்திரைநீக்கிவைத்த சற்குருவேமுன்னில்வந்து
கக்குநீயுமொன்றெனவே கலப்பறவேகாட்டிவைப்பார். (கசயி)

### வேறு

முத்தியத் தந்தமூல முச்சுளிமுனையின்வாசல்
பத்தியேயிலங்கிநிற்கும் பகலவன்போலவுற்ற
அத்திடையரசுசெய்யும் அருமதுபாதப்புக்கி
சித்திரசபையைநாடி சிறுவழிசென்றுபாரு. (கசக)

சிறுவழிசென்றுபார்க்க செகந்தனிலுள்ளோரெல்லாம்
குருசபைமுன்னில்நின்று குப்புடன்ஆடுங்கூத்தை
பிரிசமாய்ப்பார்த்துநின்றோன் பேரின்பக்கடலிற்மூழ்கி
அரசர்வந்தவனைத்தாங்கி யறிவெடுத்தருளுவாரே. (கசஉ)

### தோங்கல்.

அருளைப்புகட்டின்றகுருவறிய ஆன்னவக்குறைத்தல்லாலறியொணாது
திரளத்திண்டதைத்திட்டஞ்செய்து நினமுமொருபிடியாய்க்குறை
த்து, உருளுங்குடலதைகாலியாக்கி வுத்தகல்வத்தில்நாற்பதுநாள்
இருளிலிருந்துஊர்கண்நடுவி விலங்குமலிபதை யிருத்திப்பாரே ()

பாருஅலிபதின்குறிப்பானதுபடைத்தோனல்லாவைத்தொடுத்துகா
ண்க, நேரில்பார்ப்பவன்தன்னைசேர்த்துநேசபாசமாய்வாசஞ்செய்து
பேறிப்பார்ப்பவர்க்கெதிராகவு மிருந்துபார்ப்பவர்க்கெதிராகவும்
ஊரிலுள்ளோரைப்பார்ப்பவனை பொன்றுபடுத்தாதோர்கண்டுகொ
ள்ளார். (கசச)

### கோச்சகம்.

காணார்கள்காணார்கள் கண்டதையும்விள்ளார்கள்
காணார்கள்பேணார்கள் நலமிடரென்றாணார்கள்

தேர்னார்கள்குருசொல்லின் குறிப்பதனையறிவார்கள்
வீணர்களினமென்று விவரீதம்பேசார்கள் (கசரு)

விபரீதம்பேசினோர்கள் வேறுபட்டுயா[illegible]டாய்
அபராதமாக்கினைக்குள் ஆகியதில்மாய்ந்தபின்னர்
கபுராறைக்குள்ளாகி கரைபன்புளுக்கிரையாகி
கபருகளைசோதிக்கும்நாள் நரகவீட்டின்விரகாவார்

நரகவீட்டின்விரகாகார் நாயன்றன்னிலதனையழித்தோர்
சாருவேமென்றெண்ணமல் சார்க்குருவைமுன்னிருத்தி [தோர்
இருதயத்தால்பார்த்துணர்ந்து ஈரெண்ணத்தைவிட்டொழிந்
பாதவிப்பதில்லாமல் பரலோகம்வீற்றிருப்பார் (கசஎ)

## முருகபாவெனும்பேரின்பக்கவனம்.

### வெண்பா

பிகுறுமுருக்கபாபேரின்பத்தின்கவனம்
திக்றுசெய்வதோடு தனித்துபார்—மக்ரைவிடு
மன்னானைப்பார்த்துநீ மனமகிழ்ந்திருக்கவே
பின்னாற்சொல்வதைப்பார். (கசஅ)

### தோங்கல்

இன்னஞ்சொல்கிறேன் முருக்கபாதா னிலங்கு முகம்மது கோல
மதை, நன்னுவலிபுள்ளதானத்திலே நாட்டியதைநன்றாய்க்கூட்டிப்
பார்த்து, சொன்னதானத்தைப் பார்ப்பதுடன் சுவாசந்தன்னிலே
அல்லாவென்று, சின்னவாசலாந் தொப்புளின்கீழ் செலுத்தியதி
னின்று எழுப்பிடுவாய்; (கசகூ)

எழுப்புந்திக்ரதைநீளமாக்கி இருதயமென்னுந்தலத்தில்சேர்த்து
துழும்பிடாமலே அங்கிருந்து தொண்டைமுகத்திசுபள்ளிசேர்ந்து
விழும்பும்மகுமூறுமூளைசென்று விழியின்நடுநிலைபார்த்துவர
கிழும்புமலிபதுமுகம்மதாகி கிருபைஅல்லாவைக்காட்டிடுமே. (கருo)

வல்லான்பேரான அல்லாகூவை வாசிதன்னிலேசேர்த்தவனாய்
எல்லாவேற்றுமைவிட்டொழிந்து இலங்குந்தாமனாயிருதயத்தில்

நல்லாஷம்லையனுட்சாயமதில் நன்மைபிக்றெனுங்கலந்துணைத்து
அல்லாயிசுமதைஎழுதியபின் அதின்மேற்கவனமாய்நோக்கிருப்பாய்

அண்ணல்மணியானநபியிறசூ லறசுசெய்கின்றதாமரையை
பின்னமெலண்ணத்தைவிட்டொழிந்து பிக்றுகொண்டதைப்பார்த்து
வர, இன்னல்லாவென்னுங்கிருபையினா லிருதயவாசல்தான்றிறந்து
ஒன்னில்மறைந்தவனிருக்கும்பதி யொழிவுகோலமாயிலங்கிடுமே()

இலங்குமொளிவதுநிலைத்திடவே யேகநல்லாவைமறந்திடாமல் [டு
விலங்குதுன்யாவின்விருப்பம்விட்டுவேசைகவாவையும்விரட்டிவிட்டு
புலங்கள்ஐந்தையுமவனிலாக்கி பொல்லா அம்மாருதனையொடிக்கி
வலங்கள்சுற்றியேவரும்வாசியில் வலியநாமத்தைவருந்திடுவாய். ()

அல்லாகுவென்றசொல்லன்றியே அனுவும்வேறநாமஞ்சொல்லாதெ
ன்று, வல்லநாயனின்றிருவாக்கினால் வரிசைக்குறுவானில்வந்தாயத்
தால், நல்லாகுல்லில்லாதும்மதருகும் நாட்டிபீகவுவிகிம்பெல்அபூன்
சொல்லாலாயத்தின் பொருள் சொல்வதை சொந்தசிந்தையிற்பார்
த்திருப்பாய் (கருச)

சிந்தைவாயோடுஅல்லாவென்று சினமும்மறகாமல்சொல்லுவாய்நீ
வந்ததரியாதமாந்தர் தன்னை வருந்தாவிண்குளம்தன்னில்விடு
சொந்தவாயாலேநாயனவன்சொன்ன ஆயத்தின்பொருட்சுருக்கம்
இந்தப்பொருளறிந்தோன்றுபட்டோர் இதுவேநாமத்தின்வலியதெ
ன்றார். (கருரு)

வலியநாமநால்கறுபதுவை வளியாயறிந்திடாமானிடர்கள்
ஒலியைப்போலவேதலையசைத்து வுலகில்சிலஊருதன்னிற்சென்று
மெலிவுமனிதரைமயக்கிடவே மக்ருமந்திரந்தான்படித்து [லுற்றார்
புலிதோல்போற்றிமாடுமேய்வதுபோல் புலம்பிவயற்றதைக்கழிக்க

வயிறுகழிப்பதேபெரிதென்றெண்ணிவலியநாமத்தின்பொருளறியா
தயிரையுரியிலேவைத்துக் கொண்டுதடத்திநெய்தேடி திரிவதுபோ
ல், பயிரைத்தேடிநீரிரையாமலே பலனைநாடிப்பாழுக்கிறைப்பார்
வேறுபட்டவர்செய்யுஞ்செயல் விணுக்கிறைத்தவர்போலாமென்றார்

இறைத்தநீர்விணில்போகாமலே ஏகன்குறுவானிலருளுகின்றான்
மறைத்திடாமலேஒருவ அவன் மஅகும்அயினமாக்குந்து மென்றான்

உரைத்த ஆயத்தின்பொருளாவது உங்களுடனே நானிருப்பேனென்றான், குறைந்த அறிவுள்ளோரிதன்கருத்தின் குறிப்பையறிவது அரிதாகுமே. (௧௫௮)

குறிப்பையறியவேகூதாயவனுங் கூறுமாயத்திலின்னமொன்று, சிறப்புவாயினுல்குவல் அவ்வனுசேர்ந்தகுவல்லாகிறதல்லாகிறேறே, தரிப்புகுவல்பாத்திஜென்றுசொன்ன தக்கஆயத்தின்பொருளதனை, மறைப்புத்திரையதுயில்லாமலே மன்னனுதவியால்மகிழ்வதைப்பார். ()

பாருஅல்லாகுசகலத்தையும் படைக்கமுன்னுள்ளோனவனுமாகி தேருபடைத்தபின்தெருவீதியில் தினமுங்காணவேவெளியானவன் ஊரும்படைப்புக்குள்உள்ளாகிறே னுத்தமேதாமுனுயிருப்போனவன். கூறிப்படைத்ததையழித்தபின்னர் கூடியொற்றையாயிருப்பவனே. (௧௬௰)

## தாவூதுநபி நாயனுடன் சம்பாஷித்தது.

வெண்பா

ஒற்றையாயிருப்பவனை யுரித்தோடுதாவூது
பத்தியாயழைத்துப் பரைந்தவிதப்—சித்தமாய்
சொல்லும்பொருளுள்ளே சூட்சமிருப்பதுவை
நல்லாயுணர்ந்துதேர் (௧௬.௧)

தேரங்கல்

ஆண்டோன்நபியான தாவூதவர் அன்பாயாறப்பென்றேயழைத்து மீண்டுஉன்னைநானென்றும்மிகம் மெள்ளவெனக்குநீயறிவியெங்க, தாண்டியவர்க்கல்லாஜவாபுரைத்தான் றவர்க்குமதுசொல்வேறுச்சுது, வேண்டிதாவூது அல்லாயிடம் வேறுய்ப்பிரிந்ததின்விதமேதென்றார். (௧௬௨)

பிரிந்தவிதந்தன்னைகேளுமென்று பெரியனையனேசொல்லலுற்றான் விருந்தன்போலவேவனுன்னில்தேட்டம்விருப்பியென்னிலேநீயாக்கினாய், அறிந்துதேட்டத்தையென்னில்நின்று ஆனவுந்தனில்சேர்த்திடவே. தெரிந்துயென்னைநீகண்டனுகித்தினமும்பிரியாமலிருப்பாயென்றான். (௧௬௩)

தினமும்பிரியாமல்வணங்குஞ்செய்குமேதோர்ந்தஅபூயெசீதவர்பேசுரூர்
கனதிநாயனைநானறிந்த காலமுப்பதுவருடமாக
எனமாயெதிர்த்துநான்பேசுமொழி யேகனல்லாகுதன்னோடல்லால்
மனதையறியாதமாந்தர்தன்னோட் மறிகிநான்பேசலாயெண்ணினார்.

எண்ணுமிவர்சொல்லமுன்னிலேபே ஏகன்நபியுல்லாதன்வாக்கினால்
குன்முத்தக்கல்லிம்மஅல்ஹக்கிபோடு கூடலாம்அன்னபுசி யென்று
உன்னியுரைத்தகதீதின்பொரு ளுறுதியாகநீபேசும்மொழி
மன்னனல்லாகுவுடனேயல்லால்மண்ணனபுசுடன்பேசாதென்றார்.()

அல்லா அம்மயாகூறத்திலே அருளும் லாயெத்தக்கல்லமூ னோடு
இல்லான் தின அலகுற்றதுமா னென்றஆபத்தின்பொருளாவது
நல்லாவொருவரும்பழக்கம்பேசார் நாயன்றகுமானினுதவியல்லால்
எல்லாவஸ்த்திலும்வுசும்பவில்லை யேகனனுமதிகொண்டேயல்லால்()

வேறு.

அல்லாவுமுண்டுமாகியனாதியாயிருப்போன்றன்னை
நல்லவேசகலவஸ்தில் நாட்டியேகூட்டிப்பார்த்து
வல்லமையெண்ணிடாமல் வாய்மதம்பேசாவண்ணம்
எல்லையைப்பார்த்திருந்துஎன்னுருவறிந்திட்டேனே.(கசஎ)

கோச்சகம்

என்னிலுருவாகி யென்றுகேமெய்க்குருவாய்
அன்னைகருமண்டபத்தில் அற்புநீந்துவிராகி
சென்னியிருவிழிநடுவில் சிறந்தகவிமாமரமாய்
உன்னிதமாயாகூவினுட்பொருளைபோற்றினனே, (கசஅ)

போற்றியேயுட்பொருளை புண்ணியர்முகம்மதியா
தேற்றியேகாட்டிவைக்குந் தில்குருவுமவராகி
நாற்றியகவிமாவின் நாலெழுத்தைநானெடுத்து
சூட்டியசிந்தைகொண்டு சொல்லாலுனைத்துதித்தேன். ()

துதிப்போன்முகங்கொழுகல் துய்யோனேயுன்முகத்தை
மதிப்பிலடங்காதமகிழ்ச்சித்திருமுகத்தை
எதிப்பிலேயெப்போது மிலங்குந்திருச்சமுகம்
அதபோடுநான்பணிந்தேன் அல்கம்துலில்லாஹி (கஎய)

அல்கம்துவில்லாகி அடங்கல்புகழானவனே
சொல்லிலடங்காச் சொருபமும்நீயாகி
இல்லையென்றறிந்தோர்க்கு எட்டாக்கனிபோலாய்
அல்லாவேயொன்னிலென்னையாதரித்தருள்புரிவாய் (கஎக)

ஆதரிக்குமாதாவே அறமனையின்காவலனே
காதலிக்கும்பேர்களுக்கு கைகொடுத்துக்காற்பவனே
சூதுமாய்கைவந்துயென்னைச் சூழ்ந்துசோம்பியாக்கிடமுன்
ஏதுவாகவந்துஎன்முன் னிலங்கியருள்றகுமானே. (கஎஉ)

வேறு

சாய்கையொத்தவாழ்வுவீடு சாதிபெண்டுபிள்ளைமேல்
பேயைப்போலவேபிதற்றி பிரிந்துநின்றசெய்கையும்
காயகெதிபடைவதற்கு காதலித்துநின்றதும்
நீமேயாவதென்றுநான் அறிந்துகொண்டேனீதனே (கஎங)

நீதிபுருகான்வானுமேளார் நிலத்துமேளார்நினைத்துனை
யோதியோதிபுட்கலங்கி புரைற்ந்துஒன்னையுனையலால்
சாதிபேதமாகிவாழுஞ் சகலகல்குகட்கெல்லாம்
ஆதிகவிமாமறமறிந்து அணைத்துமேறியமுதுண்டேன் ()

தோங்கல்

அமுர்ததமேதனுரும்தென்காசியில் அண்ணல்பக்கீருமுகம்துரு,
கமலமிகமகிழ்ந்துற்றபுத்திரர் கனிபாமுகம்மதுகாமிலோலி. அமல்
செய்தருமையாயின்றசெல்வன் அறியாமிகமோடனேழையானேன்
தமியன்முகம்மது அப்துல்காதர்சங்கைமணிமுத்துமாலைசொன்னனே

கல்புக்கண்ணுள்ளஆலிம்களே காமிலாகியபுலவோர்களே
சுல்பானுதிக்கின்றசுருதியாரே சூட்சமறிகின்றசூபியாவே
குல்பாவிலக்கணமிலக்கியங்கள் கூறுமுன்சொல்லுபின்சொல்லுகள்
மல்பூசில்லாமலிந்நூலதை மனதுமகிட்சியோடிருத்துவாமே. (கஎசு)

மனதுமகிழவேயனுதினமும் மாசூக்காகியபெண்ணரசே
கனதிசெய்துயென்கவலைதீர கமலத்தோழியாய்காட்சியாகி
தனதுபிள்ளைபோற்பாவித்தென்முன் றயவுகூர்ந்துநீவந்துயென்னை
வனதுமடிமீதிலேற்றிவைத்து வுருத்தோடருட்பாலையூட்டுவாயே()

அருட்பால்குருப்பாலுமின்னமதில் ஆசைகொழுங்காமப்பாலுடனே
பொருட்பாலுருட்பாலுங்கூட்டியவள் புவனப்பதிசொற்கவீடதிலே
திரட்பாலாகவேகாட்சியதை திகட்டாவண்ணமாய்ப்புகட்டவந்து
சிறப்பாயவள்மடிமீதிலேந்தி சேனைபோலென்றன்வாயில்விட்டாள் ()

சேனையூட்டவேஞானங்கண்டேன்சிறந்தரகசியவீடுங்கண்டேன்
கோனுகுருவானகோலங்கண்டேன்குருவேயிருப்பதின்பதியுங்கண்டேன், வானம்பூமியோடு கோணங்கண்டேன்வளர்ந்தமானதின்வேடங்கண்டேன், தான அருசிலேதனதுதோழன் றனியேஅரசுமேசெலுத்தக்கண்டேன். (கஎகூ)

அரசுசெலுத்தின்றராசனைநா னன்புத்தோழனென்றேகருதி
நெரிசெய்ஒன்னுடமெய்பறிவை நேசநானுமேயுணருமலை
வரிசையுன்றிருவாயினுலேவந்த மொழிகளைமறுத்துச்சொன்ன
புருஷன்பொண்மொழியானவையைப் பொருத்துஅருளுவாய்பொன்மலரே. (கஅ௦)

## கோச்சகம்

அருளறிந்தியுரங்கையிலும் அன்பாய்விளையாடலிலும்
சிறியசின்னதோழருடன் சிறித்துவுறவாடயிலும்
வெறியிலறியாமற்செய்த விருதாச்செயல்களையும்
புருவவிழிநடுவிலங்கும்பொன்மலரேபொறுத்தருள்வாய். (கஅக)

பொறுப்பாருன்னை யன்றிபுவிவானில்யான்கண்டிலேன்
பிருப்பார்சிலபேர்க ளிவ்வுலகிலுன்னைக்கண்டோர்
திருப்பாதம்யான்கண்டபின் தியக்கமயக்கம்விட்டொழிந்து
தரிப்பீடமுன்னையன்றித் தாணியில்வேரிடம்கண்டிலேன். ()

தாரணிதனிலொருவர் தயவோடெனையழைத்து
பூரணக்கலிமாவின் பொருளையறிவித்தவரே
காரணக்குருவாயும் கமலப்பதிதூதராக்கி
ஆரணப்படியேற அன்புமகுருக்கைக்கண்டேன், (கஅங)

மகுருக்குஆசிக்குமே மனுவில்மணிநாதமதாய்
கவுசைணிநடுவிலங்கும் கலிமாவின்மறமாகி
தபசுகொலுமேடையிலே தாபராநீவீற்றிருக்க
பௌசுபவனியாடுவதைப்பார்த்துமனம்பூக்கச்செய்தாய். ()

பார்த்துமனம் பூத்தபின்னர் பாசைவலைவீசிடாமல்
காத்துகவா நபுசுதுன்யா கடினமாய்கை கலந்திடாமல்
சேர்த்தணைத்து ஆட்டுகின்றஜெகஜோதிரூகதுவின்
ஏற்றகோலமாகவென்முன் னிறங்கிவந்தாதரிப்பாய். (கஅரு)

ஆதரிக்கும் சற்குருநீ அல்லுபுக்கில் அஃலாவும்நீ
ஓதுகின்றபிஸ்மிலும்நீ உண்மையாசைநேசமும்நீ
வேதமுநீமாதமுநீ வெள்ளியும்நீ வாரமும்நீ
ஆதமும்நீ அகமதும்நீ அற்றகுமா னிற்றகீம்நீ. (கஅசு)

அற்றகுமா னிற்றகீமே அடங்கல்புகழானவனே
சுற்றத்து ஈநபிமேல் கூறுஞ்சலவாத்தும்நீயே
சுற்றத்தின்கீழ் விட்டினின்று சொல்லிவருஞ் சற்குருநீ
துற்றத்தென்னும்மண்டபத்தில் தோணவந்தவல்லவநீ. (கஅஎ)

கலித்துறை

வல்லானைக்கண்டு வணங்குவதான வகைகலிமா
சொல்லானசிற்றை சூட்சமதா யாரிபீன்சொல்லியதை
எல்லோரும்பார்த்து இறையோன் லிக்காதனிலேகிடவே
அல்லாகு சுபுகானக் கல்லாகும்மநீ யருள்புரிவாய். (ககூஅ)

மணிமுத்துமாலை-முற்றிற்று.

---

பல்லவி

குடிபல்லடா இந்தமேனி
கூவதைச்சொல்லடா நீ-பேணி

அனுபல்லவி

கெடுபுத்தியுடையோர்சொர்கேட்டுத்திரிவதுங்
கேடரிலொருவனுப்த் ஞானதிலாவதும்
வடுவுள்ளபாதையை வழியாய்யெடுப்பதும்
வாசங்கமழிக்கும் நேசனைவிடுவதும். (குடி-ய)

சறணங்கள்

க. அஞ்சுவோராறையும்நாடு அதை அறியாமலிருப்பதுகேடு
வஞ்சவினைதனை வழியாயறுத்திடு
வாசியில்கூவதை வசமாய்ப்பிடித்திடு
கொஞ்சிக்குருதன்னை கெஞ்சிற்றரித்திடு
கோலப்படுமுந்தன் றாலநிலைத்திடும். (குடி)

உ. முச்சந்திவீதியாமந்தவீடு மூலக்குகைதனையுற்றுக்கூடு
அச்சத்தைத்தீர்த்திடும் ஆதாவாகிடும்
தச்சனில்லாமாளிகை தானேசமைத்திடும்
பச்சவுடலதைப் பழுபழுப்பாகிடும்
பரிசுத்தரூகதைப் பார்க்கவேதந்திடும் (குடி)

ரு. ஒன்பதுவாசலாமந்தவீடு அதையொழுங்காயறிந்துநீ கூடு
ஐம்பூதந்தன்னை யடவாயொடுக்கிடு
ஐம்பத்தோரட்சரந் தன்னிலடங்கிடு
கெம்பூதமாகவே கெதியையடைந்திடு
கீழுருதன்னிலே கௌவுரியம்பெற்றிடு (குடி)

ச. சொர்க்கப்பதிதனில்சேர உன்னிற்சகூதுதனைநல்கிக்கூடும்
வர்க்கக்கனிதனை வாயிலெதந்திடும்
வாஷங்கமழிக்கும் தாசிபோலாடிடும்
பொற்கோலம்போலுந்தன் பொய்க்கோலமாற்றிடும்
பொற்பதிதனிலொன்னைப் புகழுடன்சேர்த்திடும், (குடி)

௫. மாற்றிப்பிடிப்பதைத்தேடு மாயமருட்டலைச்சாடு
காற்றைப்பிடித்துக் கமலத்திலேற்றிடு
கருணையிருவிழி நடுநிலைநோக்கிடு
சூத்திரமானது சொரூபமதாயிடும்
சொல்லத்தொலையாத நல்லொளிவாய்த்திடும். (குடி)

௬. சாகமுன்சாவதிற்சேரு சற்குருதன்னிலைதேடு
யாகூவென்றோதியே யாவையுமறந்திடு
எங்கள்திருநபி யிருகதஞ்சேர்ந்திடு
சாகுஅப்துல்காதற் செப்புமுறைதனை
சற்றுமறகாதொன் சித்தத்தில்வைத்திடு. (குடி)

---

பல்லவி

மெய்ப்பொருளறியாத பொய்ப்பீரைப்பின்சென்று
மேலெண்ணம்வைப்பது மதியோ.

அநுபல்லவி

கைப்பொருளறியாமற் காட்சியில்மனம்வைத்து
பொய்ப்பாதை தனைப்பற்றிப் புலம்பித்திரிவோமே.(மெய்)

சரணங்கள்

௧ ஆதியிருள்கூவில் சோதியிசுமல்லா
அடங்கல் மறைந்தும்மறியா ரின்னம்
மாதாபிதாவுமாய் மாகலி மறமுமாய்
மட்டில்லாப்பணர்கோலமறியா ரின்னம்
ஓதவே வேதமாய் தூதுறசூலுமா
யுலகில்வெளியான தறியார் அற்ப
சூதுவுலகினிலாதிபொருளது
சூழ்ந்துஇருப்பதைத்தெரியார் நானே
வேதனை யேகமாய் தீதுநிறம்பிய
வீடுநரகினில் விழுவதறியாமல். (மெய்)

௨. ஆதியிற் கொடுவந்த வேதப்பொருளதை
அறிவதொனில் விதியாச்சு அது

எதுவெனக்கேட்க யேழுசிபத்தாகி
இறையோனின் நாமமும்மாச்சு அந்தச்
சோதிசிபத்தேழால் சுருபமெடுத்திந்த
சொற்புலகில் வாலாச்சு இன்னும்
மாதுகலிமாவின் மறமாய் மறையுமாய்
மாய்ந்தோ ரதிலேரலாச்சு அதில்
காதலாய்க்கனிபொசித் தீதில்லாவாழ்வுடன்
ஹக்கனேச் சக்கன்றிக் காண்பதரியாமல். (மெய்)

௩. தந்த முதலதைத் தாழவிடாமலே
தனிக்காடுதடத்தை நீ கழித்து இந்தச்
சந்தைவுலகினில் வந்ததின்பின்னாலே
சதிவானபொய்க்கூத்தையடுத்து வுந்தன்
சிந்தைக்கலக்கமாய் வந்தவழிதப்பி
சிறுக்கானபாதையில் புகுந்து நீ
மங்கையின்மாடுபோல் மயங்கித்திரிந்தின்னம்
மண்ணறைதனில் மாய்த்திடமுன் தான்
சொந்தப்பொருளாகும் சூட்சறிவாலே நீ
வந்தவழிசென்று தந்தனையறியாமல். (மெய்)

௪. செப்பொணுப் பதிநோக்கிக் குப்புள்ளதோழனேச்
சிற்றுகச்சேர்ந்துநீ கோர்த்து என்னும்
தப்பாதுசென்றிட முப்பாலோடன்னமுந்
தண்ணீரின் றுவளம் பார்த்து இன்னும்
எப்பவுங்கனிசொரிந் தொப்பிலாருசியாகி
இலங்குங்கனிமறஞ்சேர்ந்து அங்கே
முப்பது வயதுள்ள முன்னிலேநாட்டமே
முடிதரித்த ரசனுப்பார்த்து அப்பால்
ஒப்பில்லா வாலிப மெப்பவு மிறப்பற்று
குப்பால் தரிக்கின்ற குறிப்பையறியாமல். (மெய்)

௫. அற்புதஞ்செய்யவே யெப்போதுமாவலாய்
யலேவதொனக்கிது நிதியோ அது
கற்பனையால்வரும் அற்புதமென்றுநீ
கருதியறியாதோன் விதியா அது
உற்பன மொலிநாம மோங்கியபார்வையா

ஹுலகில் வொலியாவார் மதியா அதை
அற்பறிவாளர்கள் அமலால்கிடைப்பதாய்
அலையுவதுமவர் கெதியாம் இனி
விற்பனஞ் சிந்தைக்கண் மெப்பவுங் ஹக்கனே
தப்பாதுகாண்பதை திடனென்றறியாமல். (மெய்)

சு. காணுங்கலிபாவின் கனிமறந்தனில்த்தேடி
காசினிதன்னிலே கண்டோர் அந்த
மாணிக்கமறமான மாங்கனிமறமேற
மதுவொழுகுங் கனிகான்பார் அதை
பேணியேபலவாறில் தேன்கனிபொசிக்கத்தன்
பிரைப்பணிந்தவர்கேட்பார் அவர்
ஊண்கனி கொடுத்திட வுட்கொண்டோர் தில்லினுள்
வுலகங்கள் சுற்றவுங்காண்பார் இன்னும்
ஆணிக்குருபிரயக் காணவந்தோனிடம்
பாணியாய் மதுவாங்கி ஊணுக்குடியாமல். (மெய்)

எ. மதுவைக்குடித்தோரின் மனக்கண்டிறக்கவும்
மாயுமுன் மாய்ந்தோரிலாவார் அப்பால்
சதுவேதந்தானுகி சாஸ்த்திரந்தானுகி
ஷகல்பலகோலந்தானுவார் இன்னும்
அதுவேகமாலாகி துதிருகுல்குதூசியாய்
அழிவில்லாவுயிருந்தானுவார் இன்னும்
நிதிகலிமாமறம் மூடாகிப் பணராகி
நெறிபூகாய் கனியுந்தானுவார் அந்த
கெதிபெற்ற குருமுன்னில் மதுபெற்றருந்தினோர்
துதிபெறற குதுபாகித் துலங்குவதரியாமல். (மெய்)

## பாலர்தாலாட்டு

ஆரறிவாராறிவார் ஆலநபி ஆதிகோலம்
காரணத்தைக்காணவந்த கண்மணியே தூங்கிமுழி, (க)

ஆறிரண்டுக்கீப்பாலாய் ஆறுமற்றதானம்நின்று
சிருசிபத்தேழைப்பெற்றசெல்வக்கண்ணே தூங்கிமுழி. (உ)

சீருஞ்ஜலால்கோபத்துடன் செல்வனுமால்சார்ந்தகுணம்
வீரத்துடன்வெளியில்வந்த வேதமணிதூங்கிமுழி (ங)

வேதமாதிமுத்தொளிவாய் விரும்பிநோக்கவேர்வையுமாய்
ஆதிநீரில்மோகலைபோ லானகண்ணே தூங்கிமுழி, (௪)

அலைமோதிகொதிக்கநீரி னாவிபுகையேழுவானாய்
வலைவானில்வாசித்துநீ வந்தகண்ணே தூங்கிமுழி, (௫)

ஆசைக்கடல் அலையடிக்க அந்தனுறையிருகியப்பின்
நேசபூமியேழாகியே நின்றகண்ணே தூங்கிமுழி (௬)

பூமிபோலவானதின்மேல் பொங்கி ஈருர்வழிந்திடவே
காமஜாலால்கடிந்தநீர்நி கண்மணியே தூங்கிமுழி. (௭)

உப்புநீரோடுவெப்புநன்னீ ரொன்றுசேரக்கண்டிடாமல்
குப்புகயாத்நீருவெள்ளை குருமணியே தூங்கிமுழி. (௮)

குப்புளித்துமூலைமுத்து குதித்துகருபூமிபத்த
தப்பிடாமல்முளைத்தெழும்பி தளிர்த்தகண்ணே தூங்கிமுழி ()

தளிர்க்கமுன்னேமுளைவகுதத்து தரித்தளித்துஅகதியக்காம
வெளுக்கமுன்னே இருளான விருப்பொழிவே தூங்கிமுழி.(௰)

இருளில்நினவாசைகொள்ள யிலங்கொளிவாவிருள்மாய்
பொருள்முகம்மதுகோலங்கொண்ட பொன்மலரே தூங்கிமுழி

தூக்கமதுஅகதினைப்பாய்த் துடர்முழிப்புவகதத்தெரப்பாய்
பார்க்கவெளிவாகிதத்தாய் பார்த்தகண்ணே தூங்கிமுழி. (௰௨)

அகதிய்யாஉஜூதுவித்தாய் ஆதிபூமிவகதத்துமாய்
வாகிதிய்யா இல்முமுளை வளர்ந்தகண்ணே தூங்கிமுழி (௰௩)

ஹக்குஅல்லாவித்தினைப்பாம் காணுமறம்அஹ்மதிய்யா
பக்கக்கவரெவ்வஸ்துமாய் பார்த்தகண்ணே தூங்கிமுழி (௰௪)

வஸ்திலாசை இருளினைக்கம் வருந்திமுளை தன்னிற்செல்ல
கஸ்திநிக்கிகருஞ்சோலையைக் கண்டகண்ணே தூங்கிமுழி (௰௫)

கருஞ்சோலையின்கருவாகி கலிமாவின்மறமாகி
மறைஞ்சபொருள்வெளியான முகம்மதுபாதம்தூங்கிமுழி, ()

மறைந்தகருவூரைவிட்டு மாசம்பத்துதிங்கள்செல்ல
உரிஞ்சிமுத்தமடியில்வந்த வுத்தகண்ணே தூங்கிமுழி (௰௬)

குற்றமற்றஆரிபுகள் கூடுஞ்சபைதன்னைநோக்கி
பற்றமுற்றுநடந்துசெல்லப் பாலகனே தூங்கிமுழி. (௰௭)

பத்தியுள்வேறாகாமல் பலபிறிவிற்செல்லாமல்
உததத்தவுகீதுபாதைபற்றி யொன்றுபட தூங்கிமுழி (௰௯)

ஒன்றுபடார்சைத்தான்க ளூறக்கந்தனிலானவனை
அண்டவிடாதடித்துஒட்டி அன்பருடன்தூங்கிமுழி (௨௰)

அன்பர்தோழர் அஹமதிய்பா அழகுநேசர்முகம்மதியா
துன்பமற்றகோலப்பற்றி துதியுடனேதூங்கிமுழி (௨௧)

துதியைப்பெற்றோராதமியா தூரகண்டோன் சைத்தானியா
விதிமதியைக்கொடுத்துவரும் வேந்தன்பக்கல்தூங்கிமுழி ()

விதிமதியின்வித்தாதியை விபரத்துடனின்னதென்று
செதிரினவைக்காட்டுங்குரு காதர்பக்கந்தூங்கிமுழி. (௨௩)

காதரியுல்அகுபரியா கண்டநாமமிரண்டுண்டதில்
காதர்முகியித்தீன்குதுபின் காணிக்கையாய்த்தூங்கிமுழி ()

முகிய்யத்தீனிபுனரபி முடிவறிந்துமுத்திபெற்ற
சகியுள்ளகஉதுபாதஞ் சந்தித்துநீதூங்கிமுழி (௨௫)

நகுசபந்தியாத்தரீக்கின் நாயகர்பகாவுத்தீன்
சகுசுகோலங்கண்டுகித்தஞ் சங்கைபெற்றுதூங்கிமுழி (௨௬)

சைதிறுசெய்குஅலிசாதலியீர் பாதம்போற்றி
துய்பதும்புக்குடிப்பருந்தி துணிவுபெற்றுதூங்கிமுழி (௨௭)

செய்குஅப்துல்காதர்ஷாகன் ஷாவொலியின்பாதம்போற்றி
பொய்யகற்றிமெய்யறிவில் புகுந்துபோற்றிதூங்கிமுழி. (௨௮)

காஜிசேகுசுலையுமானின் கல்விக்கடல்பாதம்போற்றி
தாஜுலன்பியாஅசுலைத் தளுவிப்பொற்றிதூங்கிமுழி (௨௯)

செய்குறோசன்முகம்மதுபகீர் செல்வர்தாதாபாதமுத்தி
மெய்க்குருவின்மேடைகண்டு மதுவருந்திதூங்கிமுழி (௩௰)

சந்தைபிதாமுகம்மதுகனீபு செய்குகாமிலொலியுல்லாவின்
சொந்தசெல்வர்முன்னிற்சென்றுசூட்சம்பெற்றுதூங்கிமுழி ()

சூட்சம்சுபுகானல்லாவே சூதுபலாயகற்றிவைத்து
காட்சிகபிபுமுகம்மதுமேல் கருணைசலவாத்தருள்வாய் (௩௨)

### வெண்பா

மறதியாலேஇன்சான் மயங்கித்தூங்குவதாய்
சுருதிநபிவாக்கால்சொல்லுகின்ற—உறுதிப்படி
நித்தம்நித்திரைநீங்க நினைவின்கண்முழிப்பிக்கும்
உத்தபொருள் சொல்வீருகந்து

## மறதியாளனைமுழிப்புவருத்தும் மனோன்மணிப்

### பதம்

### பல்லவி

தூக்கந்தெளிந்தேனே என்நித்திரையின்
னோக்கமறிந்தேனே.

### அனுபல்லவி

தூக்கமேநித்திரை தொடுத்ததுசொற்பனம்
தோணுஞ்சுளுத்தித்துதி நினைவாகவும் (தூக்கம்)

### சரணங்கள்.

௧. நினைவுஅன்னைசு நீயாமதுநித்திரை
நீண்டகனவதின்மாற்றமேமவுத்ததாய்
மனதினால்காணுமனமே முளிப்பதாம்
மூத்துகபுலந்தமவுத்ததிலாகினான். (தூக்கம்)

௨. மவுத்துஇராத்தியில் மோகித்துச்சேரவும்
மன்னனைநித்தமும் மனநினைவாக்கவும்
கவுத்துவதன்யாவைக் காலாலுதைக்கவும்
ஹக்கனைநினைவாகக் கசடறக்காணவே. (தூக்கம்)

௩. முழித்துத்தனித்துக்கண் மூடிமயங்கினான்
முன்னோனைத்தேடியே மோகத்தில்மூழ்கினேன்
தெளித்ததுமுழித்ததுந் தில்நினைவானதால்
தியக்கமயக்கமும் தீர்ந்தாசாளவே, (தூக்கம்)

௪. அரசர்பணிவரும் அன்போடுபுகழ்தலும்
ஆனநரபதியடங்கல் நடுங்கலும்
ஸ்ரீதிருதவனானால்முழுதும் பலித்திடும்
முன்னிலைபலம்பெற்ற தன்னினவெனக்கண்டு. (தூக்கம்)

௫. தனிநினவவனானால் தள்கடைவேறுண்டோ
தங்கனவவனானால் தான்காணகனவுண்டோ
மனநினவவனானால் மணிநாதன்வேறுண்டோ
மைம்பூதம்பொய்யாகி மனநினவுமெய்யாகி. (தூக்கம்)

௬. மெய்மனம்நினவன்றி வேர்பொருளுண்டானால்
ஐய்யமெய்யாழவே அதன்நினவேற்வேணும்
பொய்யதுமெய்யாழ பொருந்துமோபுவனோர்க்கு
புந்தியால்சிந்திக்க பொருந்தியநினவென்றே. (தூக்கம்)

௭. காததுகேட்குமோ கருமூலம்நினவல்லால்
கண்ணதுபார்க்குமோ கதிர்மதிநினவல்லால்
சூதுள்ளம்நோக்குமோ சுருதிநினவல்லால்
சொல்லும்மொழிகளும் சூட்சநினவென்றே. (தூக்கம்)

௮. சூட்சத்தைக்காட்டுமென் சுருதிகுருவிடம்
சொல்லியமொழிகளை நல்லவெனக்கின்னம்
ஆச்சேபிக்கவில்லா அரும்பொருளத்தாச்சி
அருளவர்பதம்பத்த பொருளவர்விள்ளவே. (தூக்கம்)

௯. சயாதோடறிவும்பொய் காதுகேள்விபிலனும்பொய்
கண்பார்வைபேச்சுடன் கதிர்சிபத்தாறும்பொய்
வயதுனாள்வாரமும் வருமாசம்வருடம்பொய்
வரிசைக்குறுஆனில் வருநினவும்மெய்யென்றே. (தூக்கம்)

௰. இன்னமாஅம்ருகு ஈதாஅருநசெய்
அன்ஐஞ்எகூலு லெகுக்குன் பயக்கூனு
சொன்னமுன்னாடியேநாட்டமே நினைவென்று
சுருதியிற்சொல்லிய சோதிமெய்நினைவென்றே. (தூக்கம்)

௰௧. மெய்யது நினவல்லால் மீதுள்ள வஸ்தும்பொய்
மெய்பகற்சுடரினால் மேதினிவெந்திடும்

வெய்யவனொருநாளும் வேகாதநிச்சயம்
வேதமதாகிய வெளியானதினவென்று. (தூக்கம்)

௰உ உறக்கமிகுத்திடில் வுடலதுஉசும்பாது
வுத்தநினவது ஒருகாலுறங்காது
சிறக்குஞ்சிபத்தேழு சேர்ந்துஒன்ருகியே
ஜிகமெங்கிலங்கிப்பின் அகமாழுதினவென்று. (தூக்கம்)

௰௩ ஆளுமகரிபா அறிவான ஞானத்தின்
ஆதிபிதா யீதென்றடுத்து என்பீரிடம்
தாளுமையாய்க்கேட்கத் தனினினவெனச்சொல்ல
தடுத்ததற்கத்தாட்சி எடுத்தெனக்கீந்திட. (தூக்கம்)

௰௪. அத்தாட்சியாவது ஐந்துமூன்ருென்ருகி
ஆறுதலத்தினிற் ஏறித்தன்னூர்சென்று
பத்தமாம்நெஞ்சிலும் பத்தியோரட்சரம்
பதிவாகக்கீரித்தன் சுளிபால் நினவுண்ண (தூக்கம்)

௰௫ நினவதுநீயாகி நீயோருருச்செய்ப
நீண்டவுருவமே நீயாகிநின்றின்னட்
கனல்பொரிபோலவே கதித்தெழுந்தலகெல்லாம்
காய்பழமாய்மனம் கனவுநினவென்றே. (தூக்கம்)

பதம்முற்றிற்று

ஷாகுமுகம்மது அப்துல்காதற்சாகிபு அவர்கள்

தங்கள் முறுவிதை தெருசித்துசொல்லிய

கும்மி,

ஆதிசமுகத்தில் அன்போடழைக்கமுன்
அவ்வல்கவிமாவினுட்பொருளை
சோதிஅபல்கசன் சாதலிமுன்னிலே
சூட்சத்தைக்கேட்டு நீ கும்மியடி—அவரால்
மோட்சத்தைநாடி நீ கும்மியடி (௧)

கத்தரும் அப்துஸலாமிபுனுமசிசு
காரணக்குரு கையைப்பிடித்தபின்னர்

பத்துகடல் மூழ்கிகுடித்தஅப்புல்கசன்
பாக்கியரைத்தேடி கும்மியடி — அவரை
நோக்கி நீ கூடியேகும்மியடி (௨)

ஒலிகளின்னெற்றியில் பாதந்தரித்தவன்
னுல்லாச சேகபுல்ஹசனலியை
வலியகுருவாக வருந்தியபேர்முன்னிர்
வருபவரைத்தேடிக் கும்மியடி — அவரின்
அருள்பெற நாடிநீ கும்மியடி. (௩)

ஏகன்றிருதூதர் வாக்குப்பெற்றபின்னர்
இல்லைவிட்டுமிசிர்செல்லையிலே
மேகங்குடையிட்ட சாதலிபாதத்தை
பெள்ளபிடித்துநீ கும்மியடி — அந்த
வள்ளல் குருமுன்னிர் கும்மியடி (௪)

தன்னைவழிநடை செல்லையிலேபெருந்
தாகமிகைக்கவே மேகமழை
முன்னேபெய்ந்து குடிப்பாட்டிவைத்தஅலி
முரிசிதைத்தேடிநீ கும்மியடி — ஒலியை
பிரிசமுடன்கூடி கும்மியடி (௫)

காடுவழிச்செல்லக் கள்ளரெதுக்கவர்
காரணத்தாலெதிர் கோட்டைகண்டு
கூடியகள்ளர்கள் குருவாய்ப்பணிந்திட்ட
கோமா னலிபாதங்கும்மியடி — அந்த
சீமானெலிமுன்னிர் கும்மியடி (௬)

காரணங்கேட்டபின் காலியிஸ்சுத்தினி
காணிக்கைகொண்டுவந்து வைத்தவர்முன்
பூரணமக்கத்தைக் காட்டிவைத்தஅலி
பொற்பாதம்பிடித்துநீ கும்மியடி — அவரின்
சிற்பொருளடுத்துநீ கும்மியடி (௭)

ஈருபதிதனி விம்பசுகத்தோ
டிருக்கவே நாடியோ ரெந்தரீக்கை
சேர்ந்தோர் சிறப்பாயிருப்பார்களென்று

செப்புக்குருத்தேடிக் கும்மியடி — அவரை
அப்பிபிடித்து நீ கும்மியடி (௮)

தன்னைத்தொடர்ந்தோரின் சீஷர்களியாவர்க்கும்
தோஷகுநரகம் கருமெனவே
மன்னனிட முருமைசீட்டதைவாங்கிய
மருபூமைத்தேடிநீ கும்மியடி — அவர்தம்
அகத்துடன் கூடி நீ கும்மியடி (௯)

ஹாப்புடன் தன்னோடு வழிநடப்போருக்கு
கொடும்பசிதாகம்முடிகிடவே
முப்பாலோடன்னமும் தப்பாமலேஈந்த
முரிசிதைத்தேடிநீகும்மியடி — அந்த
அரசரை கூடிநீகும்மியடி (௰)

அருமையாய் வாமேனோர்கள் விறைவுடனேவந்து
ஆகுமாங்கல்விகள் கேட்டுநின்ற
பெருமையபுல்கசன் சாதலிபாதத்தை
பேணிப்பிடித்துநீ கும்மியடி — அவரை
ஊணிபிடித்து நீகும்மியடி (௰௧)

சித்தமாய் சாதலி பாதைத்தரீக்கதை
சார்ந்துபிடித்து நடப்பவர்கள்
சத்தியமாய்க் குதுப்பாவார்களென்று
சாற்றும் குருத்தேடிக் கும்மியடி. — அவரை
யேத்திபுகழ்ந்து நீகும்மியடி (௰௨)

குத்துபுயார்களி லொருகூட்ட-மின்னங்
கோமானெலிகளி லொருகூட்டம
பத்தியாய் வந்தோர்க்கு இல்லைப்படிப்பித்த
பாக்கியரைத்தேடிகும்மியடி. — அவரை
நோக்கியே கூடிநீகும்மியடி (௰௩)

எவ்விதஞ்சொன்னாலு மொவ்வாதவண்ண
மெங்கள்குதுபுகாரணங்கோடி
நவ்விதஅபுல்கசன் அலிசாதலிபாதம்
நப்புதலாய் நவ்விக்கும்மியடி — அவரை
அன்புடன் தேடிநீகும்மியடி. (௰[illegible])

நம்பினேனென்னின் குருவாகயின்னம்
நம்பினேனென்னின் பிதாவாக
நம்பினேனென் மகுபூபானசாதலி
நாயகர்பாதமும் கும்மியடி—அவரை
தாயகமாய் நம்பிகும்மியடி (௰௫)

மகுபூபு மகுரூக்கும் அவராகி
மதிவானத்தில் சூரியனவருகி
தொகுப்பு பசாபீகு அவருஇலகியே
தோத்தின்றவள்ளல்முன்கும்மியடி—நித்தம்
பாற்த்திடும் வள்ளள்முன்கும்மியடி. (௰௬)

வள்ளல்குரு அலிசாதலிபாதையை
வாக்குமனதோடெடுத்தவர்க்கு
கள்ளமனம் நீங்கி ஹக்கன்றனை நித்தம்
கான்பது சக்கில்லைகும்மியடி—அவர்—முன்
ஐம்புலநொடுங்கி நீகும்மியடி. (௰௭)

ஹக்கனை சக்கன்றி கண்டுவருகவே
காட்டுமெபுல்கச னலிகுருவை
பக்கந்தனில்வைத்து மிக்கதிக்கிருடன்
பாடியேயாடி நீகும்மியடி—அவரை
தேடியேகூடிநீ கும்மியடி. (௰௮)

திக்ரில்வரிசையாம் லாயிலாகா
தெளிவு இல்லல்லாவெனும்திக்கிரை
பிக்கருடன் செய்யவே காட்டிவைத்த அலி
பீர்பாதம் பிடித்துநீ கும்மியடி.—அந்த
நேர்பாதையடுத்துநீ கும்மியடி. (௰௯)

பிக்கருடன்செய்யும் அமல்களெல்லாம்
பெரியஅமலென சொன்னறசூல்
சுக்குரு நபிபேர ராகிவந்தஅலி
சாதலிபாதத்தில் கும்மியடி—அவரை
காதலாய் கூடிநீகும்மியடி. (௨௰)

பேரில்பெரியபேர் நால்கறுபானதை
பேரின்பத்தோடிருவிழிகடுவை

நேரவேஹக்கனோடு நேசிக்கவேசெய்த
நெங்குருபாதமுன் கும்மியடி—அந்த
பெரியகுருமுன்னிர் பேணியடி. (உ௧)

ஹக்கனைநேசித்து நித்தமும் பூசிக்கக்
காட்டியமூர்த்தத்தை யூட்டிவைத்த
பக்குவராகிய அலிசாதலிபாதம்
பற்றிப்பிடித்து நீகும்மியடி—அவரை
சுத்திதொடுத்து நீகும்மியடி. (உ௨)

பற்றிப்பிடித்தோர்தம் சித்தெழுத்தின்சிற்று
பரவியுருவானதைக்கேட்க
சத்திஹறுபுநாலுட்க் கோலங்காட்டிய
சாதலிபாதத்தில்கும்மியடி—அந்த
நீதரின்முன்னிலே கும்மியடி. (உ௩)

நாலுஹறுபதைநாடெங்குஞ்சொல்வார்கள்
நாலுஹறுபதன்கோலமறியார்
நாலுஹறுபதின்கோலத்தைகாட்டிய
நாதற்குருமுன்னிற்கும்மியடி—நீத
போதகர்திருமுன்னிர் குப்மியடி. (உ௪)

கண்டுமனங்கொண்டுகாட்சிதனைப்பெற்று
காமிலுமின்சாலுமாக்கி யின்னம்
என்றுமேசாகாதிருக்குந்தலந்தனி
விருத்தியகுருமுன்னிற் கும்மியடி—புருவ
பொருத்தின்முன்னுக்கிநீ கும்மியடி (உ௫)

இருத்தியிருவிழிநடுநிலைவாசலி
லென்னுள்மறைவானகண்மணியை
சரத்தோடுகாம்பித்த சர்க்குருபாதத்தை
சார்ந்துநின்றாடிநி கும்மியடி—அதை
கூற்ந்துனீகூடியே கும்மியடி. (உ௬)

ஒடிநடக்கின்றஉட்புருக்கானதை
ஒழுங்கோடுகடிவாளம்பூட்டிதந்து
காடுமலைகளைகடத்தியேகக்கனை
காட்டியகுருமுன்னிற்கும்மியடி—முன்னிர்
நாட்டியவர்முன்னிர்கும்மியடி. (உ௭)

காடுமலைகளிலோடுநற்பாம்பதை
கட்டிப்பிடித்துமுன்னாட்டியபின்
கூட்டுளடத்துவுள்கோலத்தைப்பாரென்ற
குருஅலிபாதமுன்கும்மியடி.—சொந்த
அருள்குருமுன்னிலைகும்மியடி (௨௮)

கூடுசரீரத்தைக்கோற்த்துநின்றாட்டின்ற
குருறாகுகோலத்தைக்கருநிணல்போல்
நாடிநடுநிலைபார்த்துவரச்செய்த
நாயகர்பாதமுன்கும்மியடி.—உந்தன்
மாய்கையறுள்போக்கிகும்மியடி (௨௯)

தென்காசிநன்னகர்தன்னிற்குடியாய்
தில்குருதன்னிற்பலியாகி
சிங்காசனமீதிலாழுகின்றஅலி
செல்லக்குருமுன்னிற்கும்மியடி.—சொந்த
எல்லைகுருமுன்னிற்கும்மியடி (௩௰)

சிங்காசனமதுஅருசாகும் நம்மிற்
சீவநிலையதுசிரசாகும்
மங்காததீபம்போலாழுகின்றஅலி
மாசூக்கைத்தேடி நீகும்மியடி.—உந்தன்
பகுபூபைகூடிநீ கும்மியடி (௩௧)

மாசூக்குமஹ்மூதின்பேராகி யவர்
மானிலந்தன்னிலேபிறுகி
இரகசியகடல்மூழ்கிமுத்தெடுத்தஅலி
ராஜரின்பாதத்தில்கும்மியடி.—சிந்தை
போஜமேறூட்கூடிநீகும்மியடி (௩௨)

முத்தொளிவாகியமகுமூதுநபிபேரில்
மோகசலவாத்தைத்தாகத்துடன்
எத்தினமென்னுவுதன்னில்முழங்கிட
ஏகறகுமானேயருள்புரிவாய்.—சிந்தை
மோகமுருவநேயருள்புரிவாய் (௩௩)

ஏகனேசாகுமுகம்மதப்த்துல்காதி
றேழையான்செய்பிழைதான்பொறுத்து
மோகிமுழுக்குறுகோலமேயெப்போதும்

முன்னிலிலங்கிடச்செய்தருள்வாய்.—எந்தன்
கண்முன்னிலங்கிடச்செய்தருள்வாய் (௩௪)

வெண்பா

கும்மிமுப்பத்துமூன்றை கூட்டிப்படித்தோர்க்கு
கம்மென் னும்துக்கச்சலிப்புகளை—ஐம்மாவின்
சாதலியலிபொருட்டால் சத்தாரே நீயகட்டி
நீதிகிருபைசெய்தருள்.

கும்மிமுற்றிற்று

## மெய்ஞானந்தகளிப்பு.

பில்லாகி அல்கம்து அபதா அபதா
பீக்குல்லி ஹாலின் அலாமாகு வக்தா
மதுகுன் விமன்கான நாதா நாதா
கல்க்கன்கதிறன் வுஅற்ஷதறுசுதா பில்லாகி

அவ்வலில் அஹதாக நின்றேன் அவன்
அகுமது நூருகி அனைத்து மவனுய்
கூவெனும் சொல்லில் மறைந்தோன் அந்த
கோமானை அனுதினம் கண்டுகொண்டேனே பில்லாகி

கண்டதும் வின்றது மவனே எந்தன்
கருத்துள்மறைந்த ஹக்கனு மவனே
அண்டமு பிண்டமு மவனே எந்தன்
ஆசைக்குள் நேசநாய் கண்டுகொண்டேனே பில்லாகி

நேஷனும் பாசனு மவனே என்னில்
நெறியிருபான் ஹிக்கும் ததைஅறிவித்தலவனே
கூஷாது சொல்வது மவனே எந்தன்
குருஅஹ்மது மூலமாய் கண்டுகொண்டேனே பில்லாகி

மூலமும் கோலமு மவனே என்னில்
மூன்று கமலமாய் சமைந்ததுமவனே
ஆலம்பல தாயமைத்து என்னில்
ஆள்கின்ற றகுமானை கண்டுகொண்டேனே பில்லாகி

றஹுமான்ற கீழுமவனே என்னில்
றசூலென்னும் தூதருய் அறிவித்தவனே
பகுமு வகுமு மவனே என்னில்
பாத்திஹாவானேனை பார்த்து கொண்டேனே பில்லாகி

பாத்திஹாஸபு உல்மதானுய் என்னில்
பபகாம்பற் முஹம்மது றசூலுல்லாவாகி
ஆத்துமா றாகின்சானுகி என்னில்
ஆள்கின்ற றப்பனை கண்டுகொண்டேனே பில்லாகி

றப்பனும் ஹபீப்பனு மவனுப் என்னில்
ஒப்பற்ற ரூபமாய் செப்பலுமவனுய்
அப்ப அகப்படா தோனுப் என்னை
ஆட்டும் யிறையோனை பார்த்துகொண்டேனே பில்லாகி

பட்டமாம் பாவையில் தூலம் அதை
பாங்காக நடத்தின்ற சூட்சமாய்தானே
திட்டமா மூன்றுகயறு அது
தில் ரூகு நபுசு யிம்மூண்டென்று கண்டேன். பில்லாகி

கண்டதின் மூண்டின் தொடுப்பு கதிற்
ஒளி ரூகின் லாநென்று தெளிஉடன்பார்க்க,
நின்ற தொருவநே யன்றி, நேரில்
வேறில்லை என்று நான் கண்டுகொண்டேநே. பில்லாகி

வேரதும் தூரது மவனே விரி
பணற் கொப்புஇலைத் துளிர்பூவுகாயாகி
சீருள்ள கனிபழம் வித்தாய் ஜீக
முளுவதும் ஆள்வோனை கண்டுகொண்டேனே பில்லாகி

ஆழும் அல்லா ஹக்கொருவன் அவன்
ஆசையுடன்தன்னை பார்க்கவன்றுடை
வாள்ஜிக கண்ணாடி செய்து வகை
பலதாகிப் பார்ப்போனை வணங்கிக்கொண்டேனே பில்லாகி

வணங்கலும் வணக்கமும் அவனே வகை
பலதிகிருக்கியே செய்தலுமவனே
இணங்க பகலிரவாக்கி என்னில்
யேகமாய் ஆள்ஓனை கண்டுகொண்டேனே பில்லாகி

இறவிற்பகல் புகுந்தாப்போல் இன்னும்
பகலில்இறவது பதுங்கினுப்போல

உறவுக்கு உரித்தானோ நாகி    எங்கும்
ஒருவனாய் நிற்போனை கண்டுகொண்டேனே    பில்லாகி

ஒருவன் தன் மறையினுள்புக்க    அதை
ஓதலுமவனென்று அறிவிப்பை நோக்க
மறைவு திறையற்றோனாக    மனுவிர்
ஷன்னாகி நிற்போனை மகிழ்ந்துகொண்டேனே    பில்லாகி

ஷன்னென்ற ஈசனுமாகி    சக
உயிர்கள் அனைத்தயும் அசைப்பிப்போனாகி
என்னுள்ளில் ஷாகிதுமாகி    என்னில்
ஷாயூட்ச மானோனை கண்டுகொண்டேனே    பில்லாகி

சாயூட்ச சூட்சமதானோன்    என்னின்
ஜடத்தின்மல கூத்தென் காட்சியிலாகி
வாய்பேச்சிலவனாக நின்று    என்னில்
வசனித்து நிற்போனை பார்த்துகொண்டேனே    பில்லாகி

பார்வைக்குள் பார்வையாய் நின்று    பன்று
பழமான நாட்டதுள் வித்தர்கக்கொண்டு
நேராகக்குன்னென்றவித்தை    நெறி
மறமாகவளர்த்தோனை நேசங்கொண்டேனே    பில்லாகி

குன்னென்ற சொல் முதல்காபு    அது
கூறீறு காபதிலொருகாப் கமாலாய்
பின்னின்ற மற்றொருகாபு    அது
பேதகுபிறாகி பேஷக்கண்டேனே    பில்லாகி

பேஷ்காபு பின்னானுறண்டாய்    அதில்
பேதித்தொருனானு நகிறுவுமாகி
வாசிக்க மற்றொரு நூறு    வள்ளால்
மஃரிபா அறிவாக வளரகண்டேனே    பில்லாகி

வளர்கௌன் உலகத்தை நோக்க    அது
வாழ்நாலிருபத்தி மூன்றாகபார்க்க
பளமுள்ள கலிமா மறத்திற்    என்னை
பாய்ந்தேறச்செய்தோனை பார்த்துக்கொண்டேனே    பில்லாகி

ஏறினமறமதில் சிலவார்    அதில்
ஏருளகாய்கனி சறங்தொங்கக்கண்டு
மாறிச்சிலவாறை நோக்க    அது
மலட்டுப்பணாக மயங்கக்கண்டேனே    பில்லாகி

நிற்கும் மரமது ஒன்று அதில்
நெறிபூகாய் கனியற்ற சிலவாறைகண்டன்
வர்க்க கனிவாற் சிலது அதில்
வரமாங்கனிகளை உண்டுகண்டேனே பில்லாகி

கண்டமரம துலகம் அதில்
கனியற்றவார்கள்மெய் யறிவற்றகூட்டம்
எண்டும் கனியுள்ளவார்கள் அதில்
ஏகசுயாலாய் யிலங்க கண்டேனே பில்லாகி

இலங்கும் மெய்யரிவுள்ள ஆரிப் யிரு
லோகமும் புகள்பெற்ற யின்சானுமாகி
கலங்கி மெய்யறிவற்ற கூட்டம் காட்டு
மிருகங்கள் போலவும் கண்டுகொண்டேனே பில்லாகி

கண்டமிருகத்தில் சிலது கடு
வாய்கள் கரடிபோல் கதரவுங்கண்டு
அண்டாத கண்டு நானின்று என்னில்
ஆள்கின்ற றப்பை நானடுத்துகண்டேனே பில்லாகி

அடுக்க அவனென்னை கார்த்து அந்த
அதம்ப மிருகங்கள் அண்டாமல்பார்த்து
திடுக்கம்இனை விட்டகல தினம்
நீங்காத தொழுகையை தெரிந்துகொண்டேனே பில்லாகி

தொழுகையே சகலத்தில் மேலாய் கண்ட
தொழுகையுள் றப்பை நான் தோஸ்திகொண்டாட
அளகுற்ற மிஃறுசுயேறி என்னில்
ஆள்கின்ற றப்பனைக் கண்டுகொண்டேனே பில்லாகி

காணலும் மறைதலுமவனே கண்ணிற்
காண்கின்றஜகுருகத் தோற்றலுமவனே
தோணடத்தலுமவனே ஷுன்யா
வஸ்த்துள்ளவனுக கண்டுகொண்டேனே. பில்லாகி

வஸ்தை வேருய்ப் பிரித்தரியேன் அந்த
வஸ்தேயவனென்று சொல்லவறியேன்
கஸ்தியும் சுகமுமறியேன் கடு
குள்பட ஹக்கனை கண்டுகொண்டேனே பில்லாகி

உள்ளென்றும் வெளியென்றுமறியேன் உத்த
துவர்க்கமுடிவென்று சொல்லவறியேன்
கள்ளென்றும் மதுவென்றுமறியேன் ஹக்கை
ஹக்காலேகண்டு கலக்கமற்றேனே. பில்லாகி

ஹக்குவேற் கல்குவேறறியேன் அதில்
கலக்கம்வேற்துலக்கம் வேறெண்டும் நானறியேன்
பக்குவமாகயான் பார்க்க எங்கும்
பருகற்று நிற்போனை பார்த்துக்கொண்டேனே. பில்லாகி

பார்ப்பதும் கேட்பதுமவனே பரை
வசனங்கள்பலவாரு பேஸலுமவனே
தோர்ப்புங்கெலிப்புமவனுய் என்னின்
தோற்றத்திற் வந்தோனை கண்டுகொண்டேனே. பில்லாகி

தோற்றமு நாட்டமுமவனே இந்த
துன்யாவில்வேற்பட்டு நிற்றலுமவனே
ஆற்றுமரூகுல் யின்சானுய் என்னை
ஆள்கின்ற வஹ்ததைகண்டு கொண்டேனே. பில்லாகி

தெளஹீதெனும் சேற்றைகடத்த அப்பால்
தபுறீதெனும் சுத்தவெளியிற்நடத்த
அவுலியா ஆறிபீன்கூடி அங்கே
ஆனந்தம்பாட்ஒரை அடுத்துகண்டேனே. பில்லாகி

ஆனந்தம் பாடிகளிக்கும் அந்த
அல்லா சபைதனில் லெய்லாவை காண்க
தான் வந்தவளென்னை அடுத்து என்னை
தாங்கி அமுதூற்ற தெளிவு கண்டேனே பில்லாகி

தெளிவுற சூலுல்லா தன்மேல் தினம்
தெவிட்டாஸலவாத் ஸலாமுமே ஓத
ஒளி வுற்ற அல்லா மக்காமிற் ஓதி
அறி விக்கும்றப்பை நான் தெரிந்துகொண்டேனே பில்லாகி

வெண்பா

ஆனந்தக்களிபடித்து அறிந்துள்ளங்கொள் வோர்க்கு
வானத்தின்மேல் அறுசுவகைதெரிய—மௌனத்தில்
மஹ்பூபைகண்டு மனங்குழிற்ந்திருக்க
அகறப்புதவி ஆமீன்.

வேண்பா

அல்லா திருவருளால் அருமைமறைமுன்னை
வல்லகுருஆனில் வழுத்தியதை—சொல்லுகின்ற
சோதியரும்பொருளை சூட்சமாய்ச்சொல்லுவதை
யோதியுட்பொருளறி

வேறு

ஓதியவேதந்தன்னி லுடையோனுக்குற்றநாமம்
நீதித்தௌருத்துதன்னில் நிகழ்த்தினநாமமுந்நூறு
சோதிசபூருதன்னிற் சொல்லியநாமமுந்நூர்
காதலிஞ்சீலில்முந்நூர் கருக்குறுஆனில்நூறும்

வேறு

நூறுநாமமென்றுரைத்த நுன்னிபத்தில் நுழைந்தறிய
பேருநாமமொவ்வொருகண் பிறித்துலகில்ஒலிக்கப்பெற்றோன்
தேருபெயருக்குற்றசியல் தேகத்திடன்செய்திடவே
ஊரிலுள்ளோர்கண்டதற்கு உற்றநாமம்வைத்திடுவார். (க)

ஆதியல்லா அடங்கலுமாய் அழகுஇன்சான்கோலவழி
சோதிறகுமானுதையம்சொற் கிருபையாளனுன்
நீதிகுத்துசுநாமோதையம் நெரியுலகில் வேதக்கடல்
ஈதுலகில்றூஜனென்பே ரிறைமலிக்கின்தோற்றமென்றார் (உ)

தோற்றுஞ்சலாம்நாமோதயந் துன்யாத்தலிலச்சமற்றோன்
பார்த்துலகிழ்மூமினென்போன் பழைபமூமின்நாமோதயம்
ஏற்றஇன்சான்சிறப்படைதல் இறையோனஸீசுநாமோதயம்
ஆத்திரமாய்அடர்ந்தேறுதல் ஆண்டோன்ஜப்பார்பேர்தோற்றமே.(

ஆண்டோன்நாமமுத்தகப்பிருல் ஆலம்சிலர்பெருமைபெற்றார்
வேண்டுங்காலிக்நாமோதையப் வெளிவிநோதத்தொழில்செய்யலால்
பூண்டுவந்தபலகோலம்போல் பொருந்திக்கையால்வரைந்தெழுதல்
மீண்டுரப்பின்பேர்முசவ்விர் மெய்நாமத்திநுதையமென்றார். (ச)

நாமக்கஹார்பார்வையது நாட்டிற்சிலர்தனிலொலிக்க
ஆமேசிலர்சிலர்கோபிக்க அடுத்திருப்போரவனைநோக்கி
காமப்பொல்லாக்கோபியென்று காட்டிநாமம்பூட்டிடுவார்
தாமஹப்பார்கண்ணோலிக்க தனியுதலால்பொருத்திடுவார் (ரு)

பொறுக்கச்சிலர்சிலர்க்கீயுவோர் புண்யன்ரஜாக்குநாமொலித்தல்
வெறுக்காவண்ணமெழியோருக்குவிரும்பிக்கொடைசெய்குவது
மறக்காதல்லாநாமவஹாபு மருகியகண்ணொலித்திடவே
சரிக்கானவர்பார்த்தவனைசார்ந்தகொடையாளரென்பார் (௬)

ஊரிலுள்ளோரொருமுகமா யொருவர்கையில்வசப்படுதல்
கூருப்பத்தாகுநாமத்தின்கண்கொழிகியோரென்றறிந்துகொள்வாய்
தேருஅலீம்நாமத்தின்கண் தெளிவுடனேதெறந்திட்டவன்
பாருபலவூருசென்றுபடிக்கப்படிப்பாளனென்பார் (௭)

பாரில்சிலர்பிச்சைகொள்ள பார்த்தோர்வாங்கிதிண்ணிபெங்க
ஊரிலிர்தபிழிவுபெறல் வுடையோன்காபில்பேரொலித்தல
ஏறியமேலானென்று இடையிற்சிலர்புகழ்பெறுதல்
கூறுமல்லாநாமராபிகு குறித்தகண்ணிணொலித்தலென்றார் (௮)

குறித்துச்சிலர்தகுதிபெறல்கோமான் முயிஸ்ஸநாமொதையம்
சிறித்துசிலர்சிலமனுவைசேரு வண்ணப்நகைப்பதுவே
கர்த்தன்முதில்லுதோற்றமென்று காசினியோர்கண்டறிவீர்
பொருத்துநீதப்போர்பெறுதல் புண்யன்அதல்தோற்றமென்றார். (௯)

புண்யனுபகாரனென்று புவியிற்புகழ்தனைபெறுதல்
கண்யனல்லாநாமம்லத்தீபு கண்ணின்பார்வை யென்றறிவாய்
அன்யமடந்தேற்றஞ்செய்ய அடுத்தோரமரிக்கையாகில்
ண்ணுமல்லாநாமஹலீம் மிலங்கிபகண்ணொலித்தலென்றார். (௰)

இலங்குஅலீம்நாமத்தின்கண் பெலனொருவன்றனிலொலிக்க
துலங்கவலுப்ப முடையோனென்று தோணச்சிலர் தொகுத்துரைப்
விலங்குகுற்றஞ் செய்தவனை விசாரித்தபின்விடுவிக்குதல் [பார்
பலங்கொள்ஹபூர்நாமத்தின்கண் பார்த்திடவேபொறுத்ததென்றார்.

பொறுத்துச்சுக்கூர் செய்குவது புன்யன்சுக்கூர் நாமோதையம்
உறத்தபார்வை விழுந்தவனை யுலகின்நன்றி வாளனென்பார்
திறத்துஅலிபுல்கபீரின் றேவநாமங்கண்ணேக்கவே
அர்த்தமவன்வுலகர்முன்னில் அலிபெருமையுடையோனென்பார்.()

அடவுவஸ்தைப்பேணுதலாய் அப்பொருளினுடையோனிடம்
திடமுடனேசேர்ப்பிவித்தல் தேவன்ஹபீலுகண்ணொலித்தல்
அடக்கம்ஹசீபுநாமத்தின்கண் ஆலந்தனிலொலிக்கப்பெற்றோன்
குடுக்கல்வாங்கலெழுதுவோனைக் கூறுலகர்கணக்கனென்பார். (௰ )

கணக்கில்திறவானென்னும்பேர் கருணைஜவில்நாமோதையம்
மணக்குந்தர்மவாளனின்பேர் மன்னன்கறீம்பெருதையம் [யம்
குணக்கில்நோட்டமுடையோனென்பேர் கோமான்றக்கீபுநாமோத
வணங்கிவினு கேட்கவிடை வருமுஜீபின்தோற்றமென்றார். (௰௪
)

தோணவாசிஃநாமத்தின்கண் தொல்லுலகிலொலித்திடவே
வேணுமவன்விரிவாளனுப் வெளியுள்ளோர்விஸ்தாரனென்பார்
காணநோயிக்குற்றவிழ்தங் கையில்வைத்துகொடுக்கஹக்கீம்
ஊணியபேர்வாய்க்குவது வுடையோன்ஹக்கீம்பார்வையென்றார்.()

பார்பிள்ளைமாதாபிதா பண்புடனேபிரியப்வைத்தல்
சீருளல்லாநாமவதூது செல்வகண்ணினுதையமுமாய்
ஊரில்சுத்தவானென்னும்பே ருத்தன்மஜீதுபேரொலித்தல்
கார்புடையில்சகிதா வதுகத்தன்சகீதுகண்பார்வையாம். (௰௬)

ஆமொருவன்சிலரினின்று ஆகுஞ்சியலுசாருசெய்ய
காப்போருசாருடையோனென்னல் கத்தன்பாஹிதுகண்ணொலித்
தாமொழியும்வார்தையெல்லாம் தக்கமெய்யின்பொருளாகுதல் [தல்
எப்மிறையோன்நாமஹக்கு இலங்கும்பார்வையென்றறிவாய். (௰௭)

பாருவக்கீல்நாமத்தின்கண் படைப்புத்தன்னிலொலித்திடவே
கூறும்கல்விதனைப்படித்துக் கோட்டிலுத்தாரம்பெற்றபின்
ஊரில்வரும்வழக்குகளை யொழுங்கறிந்துபேசிடவே
நேரில்வக்கீல்பேரும்வைத்து நேர்மையுடன்கூறிடுவார். (௰௮)

நெறியுலகில்பெலவானென்று நிலைபாதபேர்வாய்த்திடுதல்
குறுநுத்துபாநாதவிந்து கொறைவுவருதிருப்பதுவும்
தெரிக்கவியின்நாமத்தின்கண் டிறந்தொலித்தலென்றறிவாய்
பெரியவொலிநாமம்பெரல் பேரொலியின்பேர்தோற்றமே (௰௯)

தோணக்காதர்நாமத்தின்கண் டிரந்துவிழிநோக்கிடவே
ஊணித்தத்துவமுடையோனென்று வுலகிலுள்ளோர்ரோதிடுவார்
ஆணி பற்றுநாமத்தின்கண் அன்புடனேயொலித்திட்டவன்
காணநன்றிவாளனென்று காசினியோர்கூறிடுவார். (௨௰)

காசினியில்பிளைத்திருக்கல் கத்தன்முகையிநாமொதையம்
நாசமவுத்துபேர்பெறுதல் நாயன்முமீத்துப்பேருதையம்
நேசங்கொண்டுநிலைத்திருக்கல் நீண்டகையூம்நாமொதைதல்
வாசப்புகழ்தனைப்பெருதல் வல்லோன்ஹமீதுதையமென்றார் (௨௧

நாமலாரின் றேற்றமது நாட்டிற்சிலர் தம்மில்விள
தாமேனியில் நசல்வெளியாய்த் தாய்பிள்ளைகள் நோயனென்பார்
ஆம்அபூவின்னுமத்தின்கண் அவனில்வெளியாகிடவே
வாமசுகம் பெருகுதலாய் வந்துபோவோர் சுகவானென்பார், (௨௨)

பார்முந்தக்கீம்நாமதோற்றம் பாருலகர் தம்மில்வீழ
தாருராசன் தடையைமீறி தடம்மறித்துத்திருடச்செய்யும்
ஊரிற்சிலதானஞ்சென்றுவுள் நுழைந்து கொள்ளையிட
காருகாப்போன்கையிற்சிக்கி கஸ்திதும்ப மனைத்திடுவான் (௨௩)

தும்பம்வழிகேட்டிற்செல்லல் துய்யோன்முவில்லு பேரொலித்தல்
சம்பத்துடன் குடும்பங்களைச் சார்ந்துதன்னோடா தரிக்கல்
இம்பக்குணமிதுவின்செயல் யேகன்ஜாமிகுநாமச்செயல்
வம்புகொண்டுவிலக்குங் குணம் வல்லோன் மானிகு பேரு[illegible]ம்

தோணவாழ்வோடு சுகம்பெருதல் துய்யோன் பாசித்துப்பேரொ
காணுவிடஞ்சென்றுதொழில்கப்பலேரிசப்பாதித்தல் [வித்தல்
வேணும்சானிகு நாமத்தின்கண் விரும்பொலுததலாலென்றறி
ஊனிச்சில ஊரிலங்கல்உண்மைபதிகு பேர்தோற்றமே (௨௫)

பாருலகிற் சிலவிடத்தில் பசுமைப்புற்பூடு முளைப்பதெல்லாங்
கூருஅல்லாபேர் அத்லின் கூர்மைக்கண்ணி னொலித்தலுமாம்
தேருபாதையின்னதென்று தில்லொப்பவே தெளித்துவைப்போர்
ஏராசீதுநாமத்தின்கண் விலங்கும்பார்வை யென்றறிவாய். (௨௬)

இலங்கும்சபூர் கடலின்கண்ணு ஈதுலகில்ஒலித்திடவும்
கலங்கலுள்ளோ ரேசிடிலும் காணக்குத்திப் பேசிடிலும்
துலங்கிச்செவி கேளாத்தல்போற்றுணிவுசட்டை போத்திருப்பர்
அலங்கோலமாய்த்திரிபவர்கள் அவரை பொறுமையாளரென்பார். ()

ஆழசிந்தை யுள்ளவனுப் ஐபைக்கண்டுமறைத்திடுதல்
கேழுஅல்லாநாமஸத்தார் கிருபைக்கண்ணி னொலித்தலுமாய்
மீழகைபின்நடப்பரிதல் மெய்யோன்கைபுபேரொலித்தல்
யேழுமக்காம் கடப்பிவைத்தல் யேகன்ஹாதி பேர்தோற்றமே. ()

ஹாதிநாமமொலிததலுள்ளோர் காசினியில் நபிகளாலீம்
சூதுமுவில்லு தோற்றத்தினர் சொல்விபு லீஸ்கைத்தானென்பார்
ஓதுங்குருவானில்வந்த வுட்பிரிவை யொழுங்குடனே
சோதிபொருள் சொல்லரிந்தோர் சூட்சம்பெற்ற காமிலானர்.(௨௯)

வேறு

பொருமையாளரென்றுசிலர் புண்யவாளரென்றுசிலர் புவனமீதில் திறமையாளரென்றுசிலர் தெரிந்தவாளரென்றுசிலர் தெளிவுள்ளோருய்வ் வுமையாளரென்றுசிலர்வாழ்வுகாரரென்று சிலர்வளங்கும்பேர்கள் பெருமைநாம மொலித்தலென்று புண்யவாளரறிவதற்குப் புகன்றிற்றேனே. (௧௰)

வேண்பா

ஆருமற்றதானமதாய் அருமை மறைநாலாய்
ஈருபத்துச்சிபத்தா விலங்கிவந்த—சீர்பையதை
ஜெகத்துளோரறிய சிந்தையதுதெளிய
வகுத்து ஓதுவதறி.

பகரேடையவேண்பா

அப்போதணுத்தோறு தாதிபிருளொளியாய்
தப்பில்லாச் சிபத்தாருய்ச் தனித்தோனே—எப்போதும்
இலங்குமொளி தன்ஸீகு எழுசிபத்தணைந்து
தொலங்கவெளித்தசிபீகு தொடுத்தேழை—கலங்காமல்
காசினியோரரிந்து ஹக்கேறொன்றுபடும்
நேசறிவுசொல்லுவதறி (௧௨)

வேறு

ஆதியிற்சிபத்துஆரை யணிந்தது வொளிவுமாகி
சோதியின்சிபத்துயேழை சூழ்ந்தது கோலமாகி
வேதியர்நூலமாக வெளிப்பட்ட சிபத்துயேழும்
நீதமாய் ஈருபத்தை நேசனிற் சேர்த்துப்பாரே (௧௩

பாருநி ஹயாத்தின்கோலம் பதிகண்னேபார்த்துநிர்க்க
ஊரினிலவனேபார்த்தோ ருயிர் ஹயாத்துள்ளோரென்பார்
தேரியயில்மின்கண்ணு தெளிவுடனொலித்திட்டோரை
ஆரிரண்டரிவைச்சொல்லும் அன்புள்ளோராலீமென்பார் (௧௪)

அன்புள்ள இராதாக்கண்ணே ஆசையேடொலித்துதாகில்
முன்புள்ள கர்மந்தன்னின் முடிவதைமொளியக்கண்டோர்
என்புகம் நாட்டக்கண்ணி னிரிதயந்துறந்தோரென்பார்
தென்புள்ளசெய்கைதேவன் றிருக்குதாத்தின்றேற்றம் (௧௫

குதறத்துவொலித்தோர்தம்மைக் கூறுவார்திடவானென்று
அதரூஸம் கென்றநாமம் அன்புடனொலிக்குமாகில்

சிதற்மொளி சிந்தைபற்ற செவியோ ருள்ளோரென்பார்
பதருடன்கதிரைப்பார்த்துப் பதிப்பித்தல் பசருமாமே (௩௬)

பசருகண் ணொளித்திட்டோர்கள் பார்த்ததினுள்ளைக்காண்பார்
பிசகில்லாக் கலாமின்றேற்றம் பிரியத்தோடு துறந்துபேச
அசனுள்ளோ ரறிந்துநோக்கி அறிவுள்ள பேச்சமெனன்பார்
நசிபுள்ளோ ரிந்தச்சூட்சம் நட்புட னறியச்சொன்னேன். (௩௭)

சொல்விசிபயத்துளவூஞ் சோதியுள்தூலஞ்சேர
தொல்லையாந்தூலந்தன்னில் தொனிமொழிகேள்விபார்வை
எல்லையின்சத்திராட்ட மிலங்கியவகைகளேழும்
வல்லவுட்சிபத்தெழுதன்னிற்வணங்கியேபேசிநிற்கும் (௩௮)

பேசிபேநிற்கும்கோலம் பீருளளமும்மதிப்பா
மாசில்லாக்குருவுமாகி மறுவினுள்ஹயாத்துமாகி
ஆசைறுகுதுசியாகி அமைந்துள்ளின்சிபத்தாருகி
நேசனின்முகமுமாகி நிலைபெற்றுநிற்கும்தானே (௩௯)

தானவன்றன்னைக்காணத் தரணியில்பண்ணுதத்தை
ஞானமாவாசல்நோக்கி இருபதியசராக்கி
ஈனமாவயருண்டாக்கி இப்பதிராதராக்கி
கொனிறையனுப்பிவைத்த குறிப்பதைக்கூர்ந்துபாரு. (௪௰)

வெண்பா

ஆகநூறுநாமமதா யாலம்வெளியானதுவை
சாகுஅப்துல்காதிர் செப்பியதை—யூகமாய்
ஓதியதின்பொருளையுள்ளத்திலொன்றுக்க
ஆதிகண்டடைவாய்நீ

நாமோதைய புஞ்சம்

முற்றிற்று

# மணிமுத்துமாலையின் பிழை திருத்தல்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தல் |
|---|---|---|---|
| 2 | 23 | பாக் | பாக |
| 4 | 15 | துன்பா | துன்யா |
| 5 | 17 | பற்ற | யற்ற |
| 8 | 9 | கொளிப் | கொளிகி |
| | 15 | சீழது | கீழதி |
| 12 | 12 | வோ | கவா |
| 15 | 24 | பிரிட | பிடரி |
| 17 | 18 | யிண்டா | யிரண்டா |
| | 19 | சடலம | சடலம் |
| 18 | 7 | வான | வானம் |
| | 22 | மூன்வரு | மூன்றுவது |
| 19 | 14 | கேட்டு | கேட்க்க |
| 20 | 18 | வஸ்த்தி | வஸ்த்ததி |
| 25 | 2 | னில | னில் |
| 22 | 5 | வல்லா | வல் ஆகி |
| 28 | 6 | லாம் | லாமஅ |
| | 10 | லான் தின | லாமன்ன தின லெ |
| | 13 | அல்லா | அல்ல |
| | 19 | அற்பநிந்தி | அற்ப விந்துநீ |
| 33 | 6 | னிலை | னிலே |
| | 16 | மறைந்து | மறிந்ததும் |
| 35 | 15 | ஊஞக் | ஊஞகரு |
| 36 | 8 | ஜாலா | ஜலால் |
| | 11 | மூலை | மூளை |
| | 24 | நிக்கி | நீக்கி |
| 37 | 2 | படதி | டடத்தி |
| | 22 | பொற்றி | போற்றி |

பக்கம் மணிமுத்துமாலையின் அட்டவணை


(2) கலிமாவந்த யிரகசியங்கூறல்.

(3) கலிமாவின் இரகசியம் பொதிந்துமனுவானது.

(4) உயிர் நதியின் தலம்.

(5) ஐனெனும் கலிமாவின் பயான்

மூலாதாரத்தில் முளைத்தெழும்பின கலிமாவின்பயான்.

(6) ஹக்குடன்சேர கலிமாமரத்தைப்பற்றி யேரும்பயான்.

(7) கலிமா உட்பொருளின் சுருக்கம்.

(9) மெய்க்குருவையும் பொய்க்குருவையும் விபரித்தல்.

(11) கலிமாவெனும் மொழிபிறந்த விபரம்.

மூலாதாரத்தின் மகித்துவம் கூறல்.

(12) ஐந்தெழுத்தால் தூலமுற்பத்தியான விபரம்.

(13) கலிமா நான்குபாதையையும் ஸ்தூலகோலத்தையும்.

பெயர்ந்து வந்ததின் விபரம்.

(16) ஒன்றாவது முசாகதா கண்ணாடி பார்ப்பதின் விபரம்.

(17) இரண்டாவது தரிசனம் சாய்கை பார்ப்பது.

(18) மூன்றாவது தரிசனம் விளக்கின்றுளிர்பார்ப்பது.

(22) எவ்வஸ்துவையும் ஒன்றாய்ப்பாவித்தறிந்த

செய்குஷிபுவிறகுமத்துல்லாவின் ஹிக்காயத்தை பேசல்.

(23) மேலான தவத்தின்பயான்.

(25) முருகபாவென்னும் பேரின்பக்கவனம்.

(27) தாவூதுநபி நாயனுடன் சம்பாஷித்தது.

(32) கூவெனும் திக்ருல்பெரும் பலனைபற்றின பதம்

(33) மெய்ப்பொருளை பற்றியபதம்.

(35) பாலர்தாலாட்டு.

(38) மறதியாளனை முழிப்புவருத்தும் மனோன்மணிபதம்.

(40) செய்கவர்கள் தன்முறாஸிதை தெரிசித்து சொல்லிய கும்மி

(46) மெய்ஞானந்த களிப்பு.

(51) ஆலம் ஜமாலென்னும் நாமொதைப புஞ்சம்.